# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 6 September 2011

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி ........ 2
ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் ........ 3
லைப் டிவைன் ........ 5
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 18
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 24
அன்னை அன்பர்களுக்கு உதவக்கூடிய கற்பனைத் திறன் ........ 25
சாவித்ரி ........ 29
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 31
டாக்டர் சம்பையா ........ 34
யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 42
அன்பர் கடிதம் ........ 52
அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 54
லைப் டிவைன் - கருத்து ........ 62

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**நல்லது தவிர வேறெதுவும் இருக்க முடியாது என்ற தெளிவு எதையும் நல்லதாக மாற்றவல்லது.**

**நிலையான பெரும்பலன் தரும் ஒரு சொல்லோ, செயலோ இவ்வுலகில் இல்லை.**

**வாழ்வில் அதிர்ஷ்டம் பலிக்க மனம் வரம்பை ஏற்கக் கூடாது.**

**பேசாமலிருப்பது பெரியது. மனம் பேசாத மௌனம் அரியது.**

*இம்மாதச் செய்தி*

**யோகத்தை ஏற்றால்,**

**விலகாதவரில்லை.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

41. பரப்பிரம்மம்: சச்சிதானந்த நிலையையும் கடந்து எந்தக் குண விசேஷத்தையோ, வர்ணனையோ ஏற்காத நிலையில் இருக்கின்ற ஆதியைப் பரப்பிரம்மம் என்கிறோம்.

42. பேரின்பம்: அசையாத சச்சிதானந்தத்தில் காணப்படும் இன்பம், அசைகின்ற இயக்கத்தில் வெளிப்படும் பொழுது பேரின்பம் என்று அழைக்கப்படுகிறது.

43. இறை வெளிப்பாடு: பரப்பிரம்மத்தில் மறைந்திருக்கும் படைப்பாற்றல் முடிவில்லாமல் இயக்கத்தில் வெளிப்படும் பொழுது அதை நாம் இறை வெளிப்பாடு என்கிறோம்.

44. வரம்பற்ற நிலை: முதலும், முடிவும் இல்லாத ஒரு நிலையை வரம்பற்ற நிலை என்கிறோம். இந்த வரம்பற்ற நிலைதான் பிரம்மத்தினுடைய சுதந்தரத்திற்கும், ஆனந்தத்திற்கும் காரணமாக அமைகிறது.

45. சமநிலை: எதனாலும் பாதிக்கப்படாத ஒரு நிலையை சமநிலை என்கிறோம்.

46. மானிட அறிவு: சத்தியஜீவியத்தினுடைய இரு பகுதிகளுக்கிடையே உள்ள இடைவெளியில் பிரிவினையை உண்டு பண்ணக்கூடிய ஜீவியம் பிறக்கும் பொழுது அதை நாம் மானிட அறிவு என்கிறோம்.

47. உள் அசரீரி: இறைவனின் எண்ணம் நமக்கு ஆன்மாவின் குரலாகக் கேட்கும் பொழுது அதை நாம் உள் அசரீரி என்கிறோம்.

48. சூட்சும ஜட நிலை: சூட்சும உலகத்தில் நம்முடைய உடம்பிற்கே ஒரு சூட்சும பாகம் உண்டு. பகவான் அந்தச் சூட்சும பாகத்தைத்தான் உண்மையான ஜட நிலை என்கிறார்.

49. அவதாரம்: பரிணாம வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக இறைவனே மானிட உருவெடுத்து பூமியில் பிறப்பதை நாம் அவதாரம் என்கிறோம்.

50. பிறப்பு: புதிய அனுபவங்கள் பெற்றுக் கொள்வதற்காக ஒரு ஆன்மா புதிய உடம்பை ஏற்கும் பொழுது அதை நாம் பிறப்பு என்கிறோம்.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அழியா இலக்கியம் அமர காவியம்.

இலக்கியம் அழிக்க முனைந்தால் சமூகம் அழியும். அது அழிக்கும் இலக்கியமாகும்.

சமூகத்தை அழியா இலக்கியமாக்குவது அழிக்கும் இலக்கியம்.

***மனித வாழ்வே அழியா இலக்கியம்.***

அன்னை வாழ்வு அமரர் இலக்கியம்.





# லைப் டிவைன்

கர்மயோகி

## 21. உயரும் வாழ்க்கை

**பக்கம் 198, பாரா 1**

மனம் அழியும் பகுதியானது. அறியாமை, இரட்டை, அளவு உற்பத்தியாகுமிடம் வாழ்வு. மனம் சத்தியஜீவியத்தின் கரு உருவம். சத்தியஜீவியம் தெய்வீக ஜீவியம் பெற்று சுயம்பிரகாசமானது. பிரபஞ்சம் ஆரம்பிக்கும்பொழுதே தன்னை மறுக்கிறது. அதன் விளைவு மனம். நாம் ஏற்கனவே கூறியபடி, வாழ்வு தெய்வீக சத்தியஜீவிய சக்தியின் கரிய உருவம். வாழ்வின் உயர்ந்த அம்சங்கள், அமரத்துவம், திருப்தியுள்ள ஆனந்தம், எல்லாம்வல்ல வலிமை. வாழ்வு ஜட உலகில் எழுகிறது. இது பிரிக்கும் மனத்தின் சக்தி. வாழ்வு ஆழ்ந்து, அமிழ்ந்து, ஜடத்தில் சிறைப்பட்டது. பசி, மரணம், இயலாமையை உற்பத்தி செய்வது. நாம் பிரபஞ்ச வாழ்வின் பகுதி. இந்த உறவு அந்த முறையை நிர்ணயிக்கிறது. நம் பரிணாமத்தின் முதல், அடுத்தது, முடிவான சட்டங்களை நிர்ணயிக்கிறது. வாழ்வின் முதல் அம்சங்கள் இயலாமை, பிரிவினை. அது சக்தியால் உந்தப்படும் ஆழ்மன உறுதி. அது வெளிப்படையாகத் தெரியாது. அது உடலின் சக்தி ஊமையாகச் செயல்படுவது. ஜட சக்திகட்குட்படும் இயலாமையது. பரிமாறுவதை

அது மேற்கொள்கிறது. ரூபமும், சூழலும் பரிமாறுவதே அது. இது ஜடம். இது கண்மூடியான சக்தி. இது சக்தி வாய்ந்த சக்தி. ஜடமான பிரபஞ்சத்தில் அர்த்தமுள்ள அறிகுறிகள் அவை. விஞ்ஞானி இதைக் காண்கிறான். இந்தப் பார்வை வாழ்வு முழுவதும் பரவுகிறது. இது ஜடத்தின் ஜீவியம். ஜடவாழ்வின் முதிர்ந்த வாழ்வின் அம்சம் இது. ஒரு புதிய சமநிலையிது. புதிய சட்டங்கள் குறுக்கிடுகின்றன. இந்த ரூபத்தினின்று வாழ்வு வெளிவரும் அளவில் அதுவும் உயரும். தன்னை அறியும் மனமாக அது பரிணாம உயர்வு பெறும். வாழ்வினுடைய அம்சங்கள் மரணம், விழுங்குவது, பசி, விரும்பி நாடும் ஆசை. அசையப் போதுமான இடமில்லை என்ற உணர்வால் ஏற்படுவது இது. போராடும் திறன் அதிகமாகி, பெருகி, வெற்றி பெற்று ஆட்கொள்கிறது. இந்த மூன்று அம்சங்களும் பரிணாமத்தின் நிலை. டார்வினின் பரிணாம தத்துவம் இதை முதன்முறையாக மக்களுக்கு அறிவித்தது. மரணம் வாழும் முயற்சியை உட்கொண்டது. வாழ்வு மறைந்துள்ள நெகட்டிவ் அம்சமே மரணம், அதன் பாஸிட்டிவ் அம்சத்தை அமரத்துவத்தை நாட அதற்கு ஆசை காட்டுகிறது. பசியும் ஆசையும் போரிட்டு நிலையான பாதுகாப்பை அடைய முயல்கின்றன. வாழ்வின் பாஸிட்டிவ் அம்சம் நெகட்டிவ் அம்சத்திலிருந்து விடுதலை பெறும் உந்துதலே ஆசை. அது தீராத பசி. வாழ்வின் ஆனந்தத்தை முழுமையாகப் பெறும் முயற்சி அது. அளவோடுள்ள திறமை என்பது வளரும் திறமை மறைந்துள்ளது. பிரம்மத்தை அடையும் முயற்சியிது, அடைந்து ஆட்கொள்ள முயல்கிறது. சூழலை அது வெல்லும். அதே போல் குறையும், லிமிட்டும் வாழ்வு தன் பாஸிட்டிவ் அம்சத்தால் நிறைவு பெறும் சூசகங்களே. அது என்றும் உள்ளது. வாழ்க்கைப் போராட்டம் பிழைக்கும் முயற்சி மட்டுமல்ல. நிறைவையும் ஆட்சியையும் தேடுவது அது. சூழலை வென்றால் தான் பிழைக்க முடியும். தானும் மாறி, பிறருக்காகவும் மாற வேண்டும். ஏற்பதும் விட்டுக் கொடுப்பதும் அவசியம். வென்று,



மாற்றுவதாலும் அதைச் சாதிக்கலாம். தொடர்ந்து நிலைப்பது இலட்சியம். நிறைவை மேலும் மேலும் தேடுவதால் மட்டும் பெற முடியும். சக்தியுள்ளது பிழைக்கும் என்ற டார்வின் கொள்கை இது.

**பக்கம் 199, பாரா 2**

ஜடமான தத்துவத்தை விஞ்ஞானம் வாழ்க்கைக்கும் நீட்ட முயற்சி செய்தது. ஜட வாழ்வுக்கும் ஜடத்துள் புதைந்துள்ள ஜீவியத்திற்கும் அது பொருந்தும். ஒரு புது தத்துவம் எழுந்ததை அவர்கள் காணவில்லை. ஜடத்திற்குப் பணிவதே அது உள்ளதற்குக் காரணம். வாழ்வின் தத்துவம் பெரும் அளவில் தாக்கும் தன்மையுடையது. அது மனிதனுடைய பிராணனின் சுயநலம். தன்னைக் காக்கும் சுபாவம் இம்முறையைக் கைக்கொள்கிறது. தீவிர வாழ்வு தன்னை வலியுறுத்தும் போக்கு இது. இந்த முதலிரண்டு வாழ்வு நிலைகளும் புதிய தத்துவத்தின் விதைகளைக் கொண்டுள்ளன. அடுத்த நிலையும் உண்டு. மனம் ஜடத்திலிருந்து பரிணாமத்தால் எழும் அளவுக்கு இப்புதிய நிலையும் எழும். அது பிராணனுடைய தத்துவம். இங்ஙனம் அது தனக்கேயுரிய தத்துவமாகிறது. மேலும் மனம் ஆத்மாவையும், சத்தியஜீவியத்தை-யும் நோக்கி வளர்கிறது. வாழ்வு மனத்தை நோக்கி வளர்வது அவற்றையெல்லாம் மாற்றிவிடும். வாழ நடத்தும் போராட்டம் நிரந்தரமாக நிலைக்கும் முயற்சி. மரணம் எனும் தத்துவம் இதற்கு எதிரி. தனி மனித வாழ்வு கட்டாயப்படுத்தப்பட்டு நிலையான நிலையை ஏற்படுத்துகிறது. இது தனக்காக அன்றி மனித குலத்திற்காகச் செய்வது. மற்றவற்றின் ஒத்துழைப்பின்றி அதனால் இதைச் செய்ய முடியாது. பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு என்ற வித்திலிருந்து அன்பெனும் தத்துவம் எழுகிறது. பிறர் மீதுள்ள பாசம், மனைவி, குழந்தை மீதுள்ள பிரியம், நண்பன், உதவி செய்வோர் தேவைப்படுவது, கூட்டாளிகள் குழு, கூட்டுச் சேரும் பழக்கம் என்பவை பரஸ்பரத்தின் அம்சங்கள். முதலில் அன்பு

சுயநலமாக இருக்கும். தன்னை வலியுறுத்தி ஆட்சி செய்யும். பரிணாமம் உயர்ந்த நிலைகளிலும் அது வலியுறுத்தும், அதிகாரம் செய்யும். தனி மனிதன் ஜீவனின் சிறு அம்சம் என்பதே உண்மை. தனி மனிதன் பிரபஞ்சத்தால் வாழ்கிறான். பரிணாமத்தால் வளரும் மனம் அதை அதிகமாக அறியும். அதற்கு அன்பும், வாழ்வும் அனுபவமானதால் அதனால் உண்மையைக் காண முடியும். இது முக்கியம். தலைவிதியை அது நிர்ணயிக்கும். இந்நிலையில் தன்னைக் கடந்த நிலையுண்டென மனம் அறியும். அதை அறிந்ததிலிருந்து அவன் எதிர்காலப் பரிணாமப் பாதை நிச்சயமாக்கப்படுகிறது. அது உயர்ந்ததை நோக்கிச் செல்லும் பாதை. ஆத்மாவை, சத்தியஜீவியத்தைச், சத்தியஜீவனை நோக்கிச் செல்லும் பாதையிது.

**பக்கம் 200, பாரா 3**

தன் சுபாவப்படி வாழ்வு மூன்றாம் நிலையை அடைய வேண்டியிருக்கிறது. சுய வெளிப்பாட்டின் மூன்றாம் நிலை சட்டங்கள் அவை. வாழ்வின் இவ்வுயர்வை நாம் ஆராய்வோம். இங்கு வாழ்வின் பரிணாமத்தினுடைய முடிவான கட்டத்தைக் காண்போம். இதை நாம் மூன்றாம் நிலை என்றோம். தோற்றத்திற்கு இந்நிலை முதல் நிலைக்கு மாறாக இருக்க வேண்டும். அத்துடன் அது எதிரானது. உண்மையில் இந்த மாறுபாடு அதன் நிறைவாகும். மேலும் இது திருவுருமாற்றம். வாழ்வின் ஆரம்பம் அதிகப்படியான பிரிவினையாலானது. அவை ஜடத்தின் இறுகிய ரூபங்கள். அணு இவ்விறுகிய ரூபத்தின் முத்திரை. அதுவே ஜட ரூபங்கட்கு அடிப்படை. அணு மற்றவற்றிலிருந்து மாறுபட்டது. மற்றவற்றுடன் இணையும்பொழுதும் இத்தனித்தன்மை நிலவுகிறது. மரணத்தையும் அறிவையும் அணு எந்த சாதாரண சக்தியிடமிருந்து வந்தாலும் எதிர்க்கிறது. தனித்த அகந்தையின் உடலுருவம் அணு. தன் வாழ்வை அணு அப்படி கூறி இயற்கையில் மற்றவற்றுடன்



இணையும் தத்துவத்தைப் பெறுகிறது. இயற்கையில் ஐக்கியத்தைப் போன்றே பிரிவினையும் வலுவான தத்துவம். உண்மையில் அதுவே தலையான தத்துவம், பிரிவினை ஐக்கியத்திற்குட்பட்ட தத்துவம். உட்பட்ட தத்துவங்கள் எப்பொழுதும் உட்பட்டிருக்க வேண்டும், அவசியத்தாலோ, கட்டாயத்தாலோ, உயர்வதாலோ, ஆசைப்பட்டோ அது உட்படுகிறது. இயற்கைக்கே உரிய இலட்சியங்களுண்டு. இயற்கை தன் சிருஷ்டிக்குப் பலமான அடிப்படையை நாடுகிறது. அதற்கு வித்தான நிலையான ரூபம் தேவை. அதனால் மற்றதனுடன் இணைந்து அழிவதை அணு எதிர்க்கும்படி இயற்கை நினைக்கிறது. இணைவதைச் சேர்வதன் மூலம் பூர்த்தி செய்ய இயற்கை அணுவைக் கட்டாயப்படுத்துகிறது. அணுவே முதற்றொகுதி. இதுவே இணைந்த தொகுப்புகளின் முதல் அடிப்படை.

**பக்கம் 201, பாரா 4**

வாழ்வின் இரண்டாம் நிலை பிராணன் எனப்படும் உயிர். வாழ்வு எளிதில் உயிரை எட்டும். எதிரான தத்துவம் இங்கு தலையாய வேலையைச் செய்கிறது. எனவே உயிரின் அகந்தையின் ஜடமான அடிப்படை கரைகிறது. அது கரையாமலிருக்க முடியாது. அதன் பகுதிகள் உடைந்து சிதறுகின்றன. ஒரு வாழ்வின் அம்சங்கள் அடுத்த வாழ்வின் அம்சங்களுடன் கலக்கின்றன. ஜட வாழ்வின் சாஸ்திரம் எழுகிறது. அதுவே ஜடத்தின் அஸ்திவார சாஸ்திரமாகும். அது தெளிவான வலுவுடையது. எதிர்காலத்தில் மனத்தின் சாஸ்திரம் எழும் வாய்ப்புண்டு. அதுவே ஆன்மீக வாழ்வின் சாஸ்திரம். இந்தத் தத்துவம் இயற்கையில் பெரும்பாலும் செயல்படுகிறது. உயர்ந்த சாஸ்திரம் எழுந்த பின்னரே அவை விளங்கும். மனிதன் மற்றவர் வாழ்வில் பங்கு கொள்கிறான். நம் உடலின் பகுதிகள் அதைச் செய்கின்றன. சூட்சும உயிரின் பகுதிகளும் அதைச் செய்கின்றன. பாசம், முயற்சி, திறமை,

ஆசையின் சக்தி, வாழ்வின் சக்தி ஆகியவையும் அப்படிப்பட்டவையே. வாழ்விலும், மரணத்திற்குப் பின்னும் இப்படி நடக்கிறது. இதைப் பொதுவாகக் காணலாம். முன்னோர் இதை அறிந்து நமக்குச் சொல்கின்றனர். நமக்கு உடலும், உயிரும் உண்டு. மரணத்தில் இவையும் கரைந்து அழிகின்றன. அடுத்த உயிருள்ள உடல்களுக்கு ஆதரவாகின்றன அவை. நம் வாழ்நாளில் நம் வாழ்வின் சக்தி பிறருள் நுழைகின்றன. தொடர்ந்து அது நடைபெறுகிறது. நமக்கு மன வாழ்வுண்டு. சிந்திக்கும் உயிரினங்கட்கெல்லாம் மன வாழ்வுண்டு. அவர்களும் அப்படிப்பட்ட சட்டத்திற்குட்பட்டவரே. மனம் அதிர்ந்து மற்ற மனத்தைத் தாக்குவது எப்பொழுதும் நடப்பது. அது உடல் கரைந்து பரவுவதை நிலையாகச் செய்கின்றன. உடனே அவை மீண்டும் ரூபம் பெறுகின்றன. தொடர்ந்து பரிமாறவும் இணைந்து ஐக்கியம் பெறவும் அவை உதவுகின்றன. கலந்து பரவுவதும், ஐக்கியமாவதும் எந்த நேரமும் உண்டு. இது வாழ்வு வாழும் வகை, வாழ்வின் சட்டம்.

**பக்கம் 202, பாரா 5**

வாழ்வுக்கு அப்பொழுது இரு தத்துவங்கள் உள. அவற்றுள் ஒன்று தனிப்பட்ட அகந்தை வாழும் அவசியம். அது தனியாக வாழ வேண்டும். தன் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அடுத்தது இயற்கை எழுப்பும் கட்டாயம். பிறருடன் இணையும் அவசியமது. ஜட உலகில் முந்தையதை அது வற்புறுத்தும். இயற்கை நிரந்தரமான தனித்த ரூபங்களை உற்பத்தி செய்ய வேண்டும். இயற்கை ஓயாமல் அசையும் சலன அலைகளாலானது. அது அனந்த ஐக்கியம் பெற்றது. தனித்த வாழ்வை ஏற்படுத்தி நிலைநிறுத்துவது இங்கு பிரச்சனை. அணு அளவில் தனி உருவம் நீடிக்கிறது. அதுவே அடிப்படை. மற்றவற்றுடன் இணைந்து அதைச் சாதிக்கிறது. சேர்ந்த தொகுப்புகள் தொடர்ந்து வாழும் நிலையது. மனத்திலும் உயிரிலும் தனித்தன்மை



பெற அதுவே அடிப்படை. சீக்கிரம் இயற்கை போதுமான பலம் பெறுகிறது. இயற்கையின் தாழ்ந்த செயலுக்கு அது பாதுகாப்பு தரும். உடனே இயற்கை தன் முறையைத் தலைகீழே மாற்றிக் கொள்கிறது. தனி ரூபம் அழிகிறது. அழியும் ரூபங்களால் தொகுப்புகள் பலனடைகின்றன. இது முடிவல்ல. அவை இரண்டும் சுமுகமானால்தான் அதை எட்ட முடியும். தன் ஜீவியத்தில் உறுதியாக நிலைத்தும் மற்றவருடன் இணையுமானால், அது முடியும். காப்பாற்றும் சம நிலையைக் கலைக்காமல் அவனால் செய்ய முடியும். அது வாழ்வில் குறிக்கிடுவதுமில்லை. மேற்சொன்னவை விஷயத்தின் இரு கூறுகள். அவை மனம் எழுவதை அறிவிக்கின்றன. உயிருக்குத் தன்னை அறியும் மனமில்லை. அந்த நிலையில் நிலையான சமத்துவமில்லை, தற்காலிகமான சமநிலையிருக்கும். அது நிலையற்றது. அது உடலின் மரணத்தில் முடியும். தனி மனிதன் அத்துடன் அழிவான், அவன் அம்சங்கள் பிரபஞ்சத்தில் பரவும். ஜட வாழ்வுக்கு இயற்கையுண்டு. அது தனித்தன்மை உருவாவதைத் தடுக்கும். தன்னையறியும் மனம் போல் தொடர வலியுறுத்தினால்தான் தனித்தன்மை உருவாகும். தனித்தன்மை அணுக்களாலானது. அவை தொடர வலியுறுத்தும். மனத்தின் ஜீவனில் சைத்திய புருஷனுண்டு. அதுவே ஆதரவான மையம். அது இரகஸ்ய ஆத்மாவை வெளிப்படுத்த முயன்று வெளிப்படுத்தும். அதற்குக் கடந்தகாலத்தை நிகழ்காலத்துடன் இணைக்க முடியும். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவை ஒரே நீரோட்டத்தின் பகுதிகள். அவற்றை இணைக்கும் திறனுக்குத் தொடரும் சக்தியுண்டு. மனிதன் இறந்தால் உருவம் அழிகிறது. எனவே நினைவு அழிகிறது. ஆனால் மனத்தின் ஜீவன் அழியவில்லை. மனத்தின் ஜீவன் நினைவு ஏற்படுத்திய இடைவெளியை நிரப்பும் பாலம், மரணம். மறு ஜென்மத்தால் அது ஏற்படுகிறது. இப்பொழுதும் மனத்தின் ஜீவன் கடந்தகால, எதிர்கால சுமையைத் தாங்குகிறது. இருப்பினும் அது குறையுடையது. அது

தூய மனமில்லை, மனிதப் பிறப்புக்கு உரிய மனம். வாழ்வையும் உடலையும் கடந்த உணர்வு அது. அது தனி மனிதனுடைய கடந்த காலத்தை அறியும். தன்னை உற்பத்தி செய்தவருடைய வாழ்வை அறியும். அவன் அவர்களிலிருந்து வந்தவன். எதிர்கால வாழ்வின் மாறிய ரூபம் அவன். அவன் வாழ்வு அவற்றிலிருந்து எழுகிறது. கடந்த எதிர்கால கூட்டு வாழ்க்கையை அவன் அறிவான். அவன் வாழ்வு அவற்றூடே இழையாக ஓடுகிறது. இதை விஞ்ஞானம் அறியும். இதைப் பரம்பரை என்கிறார். மனத்தின் ஜீவனுக்குப் பின்னால் வளரும் ஆத்மாவுக்கு இது தெரியும். இதைத் தொடரும் பர்சனாலிட்டி என்கிறார்கள். மனத்தின் ஜீவன் ஆத்ம ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது. அதுவே தொடரும் மனிதனுடைய மையம். அதுவே தொடரும் கூட்டு வாழ்வின் மையம். அவனுக்குச் சுமுகமும் ஐக்கியமும் முடியும்.

**பக்கம் 203, பாரா 7**

இந்தப் புதிய தொடர்புக்குப் பவர் உண்டு. வளர்ச்சிக்குரிய தத்துவமாக அது பிறகு மாறும். இது வாழ்வின் மூன்றாம் நிலை. இதற்கு ஒரு இரகஸ்ய தத்துவம் உண்டு. இந்த வகை பரிணாமத்தால் எழும் பொழுது இது சிகரமாகும். இது அன்புடன் தொடர்பு கொள்வதால் வருவது. தனித்தன்மையை முயன்று விழிப்பாக காப்பாற்ற வேண்டும். தேவையும் பரிமாறலும் நாம் அறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அது மற்றவர்க்கு அர்ப்பணம் செய்யவும், அவரோடு இணையவும் உதவும். அதன்பின் தத்துவம் செயல்பட இது இன்றியமையாதது. இரண்டில் ஒன்றில்லையானால், அன்பு செயல்படாது. எது நடந்தாலும் இது உண்மை. மனத்தின் ஜீவனுக்கு ஒரு உந்துதலுண்டு. அது ஓர் எண்ணம். வாழ்வின் மூன்றாம் நிலையைக் கடந்த வளர்ச்சியிது. தன்னை முழுவதும் அழித்துக் கொள்வதால் நிறைவுண்டு. அழிவு என்று அதைத் தவறாக நினைக்கலாம். இது மனத்தின் ஜீவனின் எண்ணம். வாழ்வு ஒரு



போராட்டம். நாம் தொடர்ந்து வளரும் நிபந்தனையது. அது வாழ்க்கைப் போராட்டத்தைக் கடக்க உதவும். பரஸ்பரம் விழுங்குவதால் அது ஏற்படும். தகுதியுள்ளது பிழைக்கும் என்பதே இலட்சியம். மூன்றாம் நிலை அத்தகையது. பரஸ்பர உதவியால் மேலும் மேலும் போராட்டம் நிகழ்கிறது. பரஸ்பரம் ஒத்துப் போவதால் சுயமாக நிறைவு அடையும் வழியிது. அது பரிமாறுதலையும், இணைவதையும் பயன்படுத்திக் கொள்கிறது. ஜீவனை வலியுறுத்துவது வாழ்வு. அகந்தை வளர்ந்து வாழ வாழ்வு உதவும். ஆனால் அது பிற ஜீவன்கள் தேவைப்பட்ட ஜீவன். வாழ்வு பிற அகந்தைகளை நாடும் அகந்தை. அவற்றையும் தன் வாழ்வில் ஏற்றுக் கொள்ளும். பிறருடன் இணைந்து வாழும் சட்டம் தனி மனிதர்களால் உருவாக்கப்படுகிறது. அதைத் தொகுப்புகளும் செய்யும். பொதுவான உதவியின் அன்பிற்குரிய சட்டமது. பிரியம், நட்பு, ஐக்கியம், இனிமையுடைய சட்டமிது. பிழைப்பதையும், பரஸ்பரம் அர்ப்பணிப்பதையும் அவை வெற்றிகரமாக சுமுகமாகச் செய்கின்றன. தனி மனிதன் தொகுப்பை வளர்ப்பதும், தொகுப்பு தனி மனிதனை வளர்ப்பதும் சட்டம். அத்துடன் மனிதன் மனிதனை வளர்ப்பதும், தொகுப்பு தொகுப்பை வளர்ப்பதும் சட்டம். பரஸ்பரம் அர்ப்பணிப்பதாலும், பரிமாறுதலாலும் அது ஏற்படுகிறது. பரிணாமத்தின் மூன்றாம் நிலையிது. அது மிகப் பொருந்தும்.

**பக்கம் 204, பாரா 8**

மனத்தின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் வளர்கிறது. மேற்சொன்ன முக்கியத்துவம் இந்த வளரும் முக்கியத்திற்கு அறிகுறி. மனம் வாழ்வைத் தன் சட்டத்தால் கட்டுப்படுத்துகிறது. ஜட வாழ்வில் மனம் அது போல் நாளுக்கு நாள் அதிகமாகச் செயல்படுகிறது. மனம் அதிக சூட்சுமமானது. கிரகிக்க மனம் விழுங்க வேண்டும் என்ற அவசியமில்லை. மனம் வளர வேண்டும், முன்னேற வேண்டும் என்ற அவசியமில்லை. எவ்வளவு மனம்

கொடுக்கிறதோ அவ்வளவு பெறும், பெறுவது வளரும். பிறருடன் அதிகமாக இணையும், பிறரை அதிகமாகத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும். இவ்விதம் தன் ஜீவன் வளரும் அளவை அதிகப்படுத்திக் கொள்ளும். ஜட வாழ்வு அதிகமாகக் கொடுத்தால் சோர்ந்துவிடும். அதிகமாக விழுங்குவது ஜட வாழ்வுக்கு அழிவு தரும். மனம் ஜடத்தைப் பாராட்டினால் அதே போல் தளரும். எந்த அளவுக்குச் சோர்வு என்பது எந்த அளவுக்கு ஜடத்தை நாடுவது என்பதைப் பொறுத்தது. மனம் தன் சட்டத்தைத் தானே வகுத்துக் கொள்ளும். அந்த அளவிலே மனம் தன் வரையறையைக் கடக்கும். மனம் தன் ஜடமான வரையறையை எந்த அளவுக்குக் கடக்கிறதோ அந்த அளவில் அது கொடுப்பதும், பெறுவதும் ஒன்றாகும். சச்சிதானந்த சிருஷ்டிக்குத் தெய்வீகச் சட்டம் உண்டு. பிரிவினையில் ஐக்கியம் அது. அந்த ஐக்கியம் தன்னையறிந்தது. மனம் தன் சட்டமான வளரும் கதியை நாடுகிறது.

**பக்கம் 204, பாரா 9**

பசியும், ஆசையும் மனம் தன்னையறியும் முதல் அறிகுறிகள். இது இரண்டாம் நிலை. வாழ்வில் ஆரம்ப முழு நிலையில் இது இரண்டாம் கட்டம். இதிலிருந்து மூன்றாம் கட்டம் எழுகிறது. இது ஒத்துழைக்கும் தத்துவத்தால் உற்பத்தியாகிறது. அது அன்பு வளர்வதால் ஏற்படுகிறது. இது ஆசையின் சட்டத்தை அழிக்காது. மாறாக, இது அன்பாகத் திருவுருமாறி தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறது. அன்புக்கொரு சுபாவமுண்டு. தன்னைப் பிறருக்கு அர்ப்பணம் செய்வது அது. மேலும் பதிலாக அன்பு பிறரை ஏற்க விரும்புகிறது. ஜீவனுக்கும் ஜீவனுக்கும் இடையே ஏற்படும் பேரம் அது. ஜட வாழ்வுக்கு அர்ப்பணம் தோன்றுவதில்லை. அது பெற மட்டும் விழைகிறது. ஜட வாழ்வைக் கொடுக்கக் கட்டாயம் எழுகிறது. அது பெற மட்டும் விழையும் வாழ்வு. அதனால் கொடுக்க முடியாது. எனவே அது வறண்டு, வாடி அழிகிறது. வாழ்வின்



முழுமையில் இது சாத்தியமா? இங்கு இவ்வுலகில் அது முடியுமா? உண்மையில் அதற்கு விருப்பமில்லை, அது கட்டாயப்படுத்தப்படுகிறது. அது இயற்கையின் ஆழ்மன உந்துதல்களைப் பணிகிறது. அது விரும்பி அதை ஏற்கவில்லை. அந்நிலையில் அன்பு குறுக்கிடுகிறது. அன்பின் அர்ப்பணம் ஆரம்பத்தில் ஜீவனற்றதாகும். அந்தச் சுபாவம் நீடிக்கும். இது அணுவின் ஆழ்மன உறுதி. அன்பே முதலில் பசியின் சட்டத்தைப் பணிகிறது. பெறப் பிரியப்படுகிறது. பிறரிடமிருந்து கட்டாயப்படுத்திப் பெறுகிறது. அடுத்தவர்க்கு அன்பு சரணடைந்து அர்ப்பணம் செய்வதில்லை, பெறுவதின் நிபந்தனையாக அன்பு ஆரம்பத்தில் கொடுக்க சம்மதிக்கிறது. தான் விரும்பும் பொருளைப் பெற அது தரும் விலை. இந்நிலையில் அன்பு இன்னமும் தன் சுபாவத்தை அடையவில்லை. அது உண்மையான சட்டம் பெறுவதும் தருவதும் சமமாக இருப்பது. அந்நிலையில் பெறும் இன்பமும், தரும் இன்பமும் சமமாக இருக்கும், முடிவில் கொடுக்கும் இன்பம் பெறுவதைவிட அதிகமாகும். பிறகு அந்நிலையையும் அது கடக்கும். சைத்திய புருஷனின் தழல் எழுந்து செயல்படும். அங்கு முழு ஐக்கியம் பெற்று நிறைவு பெறும். அதுவே பெரும் சத்தியத்தை அடைவது. இதுவரை புறம்பானது, இனி தன் பெரிய அகமாக, இனிமையானதாக ஆகும். இது தனித்தன்மையைவிடப் பெரியது. அன்பின் சட்டத்திற்கு வாழ்வின் ஆரம்பம் உண்டு. இது ஒரு உந்துதல். பிறரில் தன்னையறிந்து பூர்த்தி செய்யும் உந்துதல் அது. இதைப் பிறர் பூர்த்தி செய்கின்றனர். நிறைவால் இது நிறைவுபடுகிறது. அடுத்தவரை ஆண்டு தன்னை ஆட்கொள்ள அனுமதிக்கிறது. தன்னைப் பிறர் ஆட்கொள்ளாமல் தான் பிறரை ஆட்கொள்ள முடியாது.

**பக்கம் 205, பாரா 10**

வாழ்வுக்கு முதல் நிலையுண்டு. ஜடமான அணு வாழ்வு

அதன் திறன். அது தன்னை ஆட்கொண்ட நிலை. அது ஜட வாழ்வுக்குப் பணிந்தது. ஜட வாழ்வு புறவாழ்வுக்குப் பணிந்தது. இரண்டாம் நிலை எழுகிறது. அது தன் அளவை அறியும். அது அகவாழ்வு, புறவாழ்வு இரண்டையும் ஆட்கொள்ள விரும்புகிறது. அவற்றைத் தன் ஆதிக்கத்திற்குள் கொணர முயல்கிறது. இது இரண்டாம் நிலை. மூன்றாம் நிலை இங்கிருந்து ஆரம்பிக்கிறது. ஆரம்ப காலத்து அம்சங்களை அது திருவுருமாற்றுகிறது. அது சுமுகமான நிறைவு. அந்நிலை முன்னிலை அம்சங்களை மீண்டும் வெளிப்படுத்துகின்றன. அவை எதிராகக் காணப்படுகின்றன. புற வாழ்வு பெரு வாழ்வாக அறியப்படுகிறது. தொடர்பு கொள்வதாலும், அன்பாலும் அது எழுகிறது. அது சட்டத்திற்கு உட்பட விரும்புகிறது. அது தேவை. தொகுப்பின் வாழ்வு வளர்வதால் ஏற்படும் உந்துதல் அதன் வழிப் பூர்த்தியாகிறது. இந்த உந்துதல் தனி மனிதனைக் கிரகித்துக் கொள்ள முயல்கிறது. வேறொரு ஆதிக்கமுண்டு, தனி மனிதன் பிறர் வாழ்வை ஆட்கொள்வது, அவனுடையது எனக் கொள்ளும் அனைத்தையும் அது அவனுக்குக் கொடுக்கிறது. தனி மனித ஆதிக்கத்திற்கு அது எதிரான உணர்வு. அது பரஸ்பரம் உள்ள தொடர்பு. தனி மனிதனும் அவன் வாழும் உலகத்திடையே-யுள்ளது. இரு மனிதரிடையே அதை ஸ்தாபிக்கிறார்கள். இரு தொகுப்பிடையேயும் அது உண்டு. அதை வெளிப்படுத்தவோ, முழுமைப்படுத்தவோ முடியாது. தனி மனிதனுக்கும் தொகுதிக்கு-மிடையே அதே உறவை ஏற்படுத்தாதவரை அது நிலையாகாது. வாழ்வுக்கும் ஜடத்திற்குமிடையே உள்ள பிணக்கே அடிப்படை. மனிதன் சுமுகத்தை நாடுகிறான். அவன் சுதந்தரத்தையும் தன்னை வற்புறுத்துவதையும் நாடுகிறான். இவற்றால் அவன் தன்னை ஆட்கொள்கிறான். எதிர்ப்பிடையே சகஜ நிலையை உண்டு பண்ணுகிறான். தனி மனிதன், தொகுப்பு எதிரானது. அன்பும் தொடர்பும் கருவிகள். நட்பும் உறவும் அதை சாதிக்கின்றன. தொகுப்பிலுள்ள மற்றவர்க்கு இதன் மூலம் மனிதன் தன்



அர்ப்பணத்தைச் செலுத்துகிறான். இவை முன்கூட்டி நிர்ணயிக்கப்-பட்டவை. இது இயற்கையின் ஆதியிலிருந்து எழுகிறது. இவை வாழ்வின் பிரச்சனை. மனத்தின் உயர்ந்த தத்துவம் தீர்வு காண்கிறது. மனம் மட்டுமே சுமுகத்திற்கு வழி செய்யும். உண்மையில் சுமுகம் மனத்தைக் கடந்து சக்தியிடம் உள்ளது.

### பக்கம் 206, பாரா 11

மனம் பிரம்மத்தை உலகில் வெளிப்படுத்தும் அம்சம். ரூபம் உலகுக்கு வரப் பயன்படும் கருவி மனம். உலகுக்கு வந்த மனம் தனி மனிதனில் ரூபம் உறைய உதவுகிறது. இரண்டாவதாக மனம் வாழ்வு சத்தியத்தை நாடி உயரும் கருவி. ரூபம் சத்தியத்தை உடலாக வெளிப்படுத்துகிறது. மனிதனின் தனித்தன்மை அதன் பிரதிநிதி. எனவே இலக்கு மனத்தைக் கடந்த தத்துவத்தில் உறைகிறது. அதுவே பாதையின் முடிவு. நமது ஆராய்ச்சியின் ஆரம்பம் அதை நமக்குணர்த்திற்று. அன்பில் உறைவது உறவு. பரிமாறுதலும் சரிசெய்வதும் உள்ளன. மனத்திற்கும் வாழ்விற்கும் உரிய சட்டங்களுண்டு. பரிபூரண தீர்வை இவைகளெல்லாம் எட்ட முடியாது. உணர்ச்சியின் சட்டமும் உதவாது. அது வாழ்வின் நாலாம் நிலையிலிருந்து எழ வேண்டும். இங்கு ஜீவாத்மாவின் காலம் கடந்த ஐக்கியம் சித்திக்கும். இங்கு வாழ்வுக்குரிய எல்லா அஸ்திவாரங்களும் தெளிவாக இடப்படுகின்றன. உடலின் பகுதிகளில் அவை உறையவில்லை. பசியின் வேகத்தில், உயிரின் பாசத்திலும் அவையில்லை. மனத்தின் நிறைவற்ற சுமுகத் தொகுப்புகளிலும் அவையில்லை. இவை அனைத்தும் சேர்ந்து அதை உற்பத்தி செய்ய முடியாது. ஆத்மாவின் ஐக்கியத்திலும் சுதந்தரத்திலும் உறைவது அது.

*முற்றும்.*

❋❋❋

# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ அன்பர்கள் காண மறுக்கும் அன்னை இரகஸ்யம்

அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும் வரும் வரை உடலுக்குக் காயகல்பமில்லை.

இறைவன் வரும் தருணம் நீண்ட நெடிய பாதையின் முடிவானது.

அந்நேரம் ஆயிரம் ஆண்டில் நடப்பது அடுத்த நிமிஷம் நடக்கும்.

அதை உலகுக்கு அறிவிக்க (a portion of the Lord) ஆண்டவனே வந்தார்.

***அவர் ஸ்ரீ அரவிந்தர்.***

வேதம் கண்ட அமர வாழ்வு ஆத்மாவுக்குரியது, உயிருக்கோ, மனத்திற்கோ, உடலுக்கோயில்லை.

ஆத்மா பெற்றதைத் தவறாக உடல் பெற்றதாக நினைத்தவர் காயகல்பம் தேடினர்.

தேடியவர் பெரிய வைத்தியரானார்.

அதுவரை ஆத்மா வளரும் என அறியார்.

ரிஷிகள் கண்டது காலத்திற்குட்பட்டது.

அதனால் கர்மத்தை வெல்ல முடியாது.

எந்த வைத்தியருக்கும் கட்டுப்படாத வியாதியிருந்தது.



ஸ்ரீ அரவிந்தர் கண்ட ஆத்மா தெய்வீக ஆன்மா (Divine Soul).

இது அசையும்.

அசையாமலிருக்கும். எப்படியிருக்க வேண்டுமென அதுவே நிச்சயம் செய்யும்.

இதைச் சைத்திய புருஷன் என்றார்.

சைத்திய புருஷனுக்கு,

1) மரணமில்லை.
2) தோல்வியில்லை.
3) இல்லையென்பது இல்லை.
4) காலம், மனம் கட்டுப்படுத்தாது.
5) மூன்றாம் நிலைக் காலம் (Simultaneous Time) அதன் காலம்.

ஸ்ரீ அரவிந்தர் ரிஷியில்லை, அவதாரமில்லை, a portion of the Lord.

ஆண்டவனுடைய பகுதி.

அவரை விட்டு அகலாமலிருக்க **பொய்** எதிரி.

சைத்திய புருஷன் வெளி வந்து வாழ்க்கை நடத்த வேண்டும்.

அதற்குரியவர் தவறினால் தண்டனை பெரியது.

எவரும் அதை அறியவில்லை.

**மனிதன் ஸ்ரீ அரவிந்தருக்கு முழுத் துரோகம் செய்தான் என அன்னை கூறினார்.**

துரோகம் செய்தவர் மனம் மாறவுமில்லை.

பொய் அழிந்து, துரோகம் விஸ்வாசமாக மாறினால் அன்னை நம்மை விட்டுப் போகமாட்டார்.

எவர் அதைச் செய்தாலும் அவர் அன்னைக்குரியவர்.

அவருக்குத் தோல்வியில்லை, மரணமில்லை.

உலகம் அவருள். பிரம்மம் அவருள்ளேயுள்ளது.

அதை அறிவால் நாடாமல், அன்பால் தேடுவது நம்பிக்கை.

## ✡ பெயிண்ட் திருடியவன்

இராணுவ அதிகாரி ஓய்வு பெற்று தொழிலாரம்பிக்க 40 ஏக்கர் நிலம் வாங்கி, தன் பெயரில் ஒரு நகர் கட்ட ஆரம்பித்தார். அருகில் உள்ள கிராமத்தில் ரௌடி ஒருவன் அதிகாரம் செலுத்தி வருகிறான். இவர்களை ஆழம் பார்க்க அவன் ஒரு பையனை விட்டு பெயிண்ட் திருடச் சொன்னான். ஜவான்கள் பையனைப் பிடித்து நையப் புடைத்தனர். மறுநாள் அந்த ரௌடி வந்தான். யார் இங்கு முதலாளி எனக் கேட்டான். அவன் கேட்ட குரல் முதலாளிக்குப் பிடிக்கவில்லை. விசிலை எடுத்து ஊதினார். இரு ஜவான்கள் வந்தனர். ரௌடியை அறையில் தள்ளி செம்மையாக அடித்தனர். அவன் வெளியில் வந்தவுடன் முதலாளியைப் பார்த்து,

*“நான் வெகுநாட்களாக ஒரு தலைவரைத் தேடுகிறேன். இன்று கண்டு கொண்டேன். நீங்களே இனி எனக்குத் தலைவர். நாளைக்கு என் வீட்டிற்கு விருந்திற்கு வர வேண்டும்” என்றான்.*

இது உலகம். மனிதன் நிலைமைக்குத் தகுந்தாற்போல் யோசனை செய்யாமல் தலைகீழே மாறுகிறான். நாம் அன்னைக்குரியவாறு அது போல் மாற வேண்டும். நாம் அவனைப் போல் தலைகீழே மாற வேண்டும்.

- ***மனிதனால் தலைகீழே, தன் நிலைக்கு எதிராக, உடனே, தானே, பிறர் எடுத்துச் சொல்லாமல் மாற முடியும் என்று இது காட்டுகிறது.***



- மதருக்குரிய நேரம் வரும்பொழுது இது போல் மாறி மதரை ஏற்க முடியுமா?
- ‘என்னால் முடியாது’ என்பது ‘எனக்குப் பிடிக்காது’ என இந்நிகழ்ச்சி காட்டுகிறது.
- நமது சொந்த அனுபவத்தில் நாம் இது போல் மாறியிருந்தால் அதை நினைவுகூர்ந்து அதன்படி இப்படி மாற வேண்டும்.
- அரசியலில் நேர் எதிரியிடம் சேர்வதும் பெயிண்ட் திருடியவன் மாறுவதும் ஒன்றே.
- இது மனித சுபாவம் - நாம் அப்படியில்லை எனக் கூறுவது பொருத்தப்படாது.

  ***நம்மாலும் இது போல் மாற முடியும். நாம் மறுக்கிறோம் என்பதே உண்மை.***
- அந்த உண்மையை ஏற்பது (sincerity) உண்மை.

## ✡ கதை

இந்த ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு கதையாக எழுதலாம்.

எனக்குக் கதை எழுத வராது. கட்டுரையைக் கதையாக எழுதி வருகிறேன்.

கதை மனத்தைத் தொடும், மனதில் பதியும், கட்டுரை பதியாது.

கட்டுரையாக நடப்பவற்றைக் கதையாக மாற்றி மனத்தில் பதிய வைப்பது விவேகம்.

| | | | |
|---|---|---|---|
| கட்டுரை | - வாழ்வு; | கதை | - அனுபவம் |
| | - அறிவு; | | - விவேகம் |

அறிவுபூர்வமாக உலகையறிவது என்பது இதுவே.

உலகம் நம்மைச் சுற்றியுள்ளது.

கண் திறந்து பார்த்தால் கடவுள் தெரிவார்.

சிலர் பேசுவதைப் பலரும் ஆர்வமாகக் கேட்பார்கள்.

அவர்கள் சொல் ஆன்மீக நயமுடையதாக இருப்பதால் அப்படி மற்றவர் கேட்பார்.

கடந்தது முழுமையானது, ஒரு பெரும் உண்மை.

கடந்தது கடந்தது, அது வேறு.

இரண்டும் உண்மை.

✡ **எவ்வளவு வரும்?**

அன்னையை வழிபட்டால் அதிகம் சம்பாதிக்கலாம் என மது விலக்கு போன பின் கடை நடத்துபவரிடம் கூறினேன்.

*“இந்தக் கடைகளில் வரும் அளவு வருமா?” எனக் கேட்டார்.*
*வராது என்றேன்.*

உண்மையென்னவென்றால் உண்மைக்கு உழைப்பும் தேவையில்லை. இதைவிட அதிகம் வரும். ஏராளமாக வரும்.

- பண வரவை நினைப்பது, பக்குவமில்லை.

  அது சரியான நினைப்பில்லை.

  இது கவனிக்கக்கூடியது.

  இதில் வரும் அளவு மற்றதில் வந்தால் அதை ஏற்கிறோம்.

  வருவதை - பணத்தை - ஏற்கிறோம். தருவதை ஏற்கவில்லை.

  ‘நிலையும் நினைப்பும்’ - நிலையை நிர்ணயிப்பது நினைப்பு.



மனம் முக்கியம் - பணமில்லை.

இந்த விஷயத்தில் எத்தனை பேர் தேறுவார்கள்? - நாம் தேறுவோமா?

*பணம் யாரைத் தேடி வரும்? தன்னைவிட உயர்ந்தவரை நாடும்.*

நாம் பணத்தை நாடினால், அது நம்மை நாடுமா?

இது அடிப்படையாக அனைவரும் அறிந்தது.

பணம் நம்மை நாட நாம் - நம் மனம் - அதைவிட உயர்ந்திருக்க வேண்டும்.

இது பணத்திற்கு மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் உள்ள சட்டம்.

எந்த நிலையில் ஜெயிக்க வேண்டுமோ, அந்த நிலைக்குரிய தகுதி வேண்டும்.

பேச்சு, எண்ணம் சரியாக இருந்தால் போதாது.

மனமும் சரியாக இருக்க வேண்டும்.

மனநிலை சரியாக இருந்தால் இந்தத் தொழிலதிபர் இத்தொழிலில் சம்பாதிப்பதைவிட ஏராளமாக நல்ல முறையில் பணம் வரும் என்பதே உண்மை.

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உற்சாகத்தையும் தொற்று வியாதியையும் அறிவது போல், சூட்சுமமான தெம்பும், தொந்திரவும் தெரிவதில்லை.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

226. *மருந்தும் விருந்தும் 3 நாள்.*

**எந்த முறையும் ஒரு தரம் பலிக்கும்.**

227. *அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.*

**அன்பின் அமிர்தத்திற்கு அளவில்லை.**

228. *சீசீ இந்தப் பழம் புளிக்கும்.*

**எந்தப் பழமும் எப்பொழுதும் புளிக்காது.**

229. *ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.*

**மனம் அடுத்தவர் அதிர்ஷ்டத்தை நாடினால் அருள் நம்மை நாடும்.**

230. *அரசனை நம்பி புருஷனை விட்டாற்போல.*

**அருளை விட்டகன்றால் பேரருள் வரும்.**

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்திற்குப் பார்வையில்லை. மீண்டும் மீண்டும் கேட்டதையே கேட்கும். அன்னை பார்வையைத் தருகிறார். அக்கண்ணோட்டம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும்.



# அன்னை அன்பர்களுக்கு உதவக்கூடிய கற்பனைத் திறன்

N. அசோகன்

அன்னை சமாதி அடைந்து பல வருடங்கள் ஆகிவிட்டதால் அவரை நாம் இப்பொழுது நேரடியாகப் பார்க்க முடியாத நிலையில் இருக்கின்றோம். இருந்தாலும் நம்முடைய கற்பனாசக்தியைப் பயன்படுத்தி அன்னையோடு நாம் மானஸீகமாக தொடர்பு கொண்டு அவருடைய அருளாசிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நமக்கு என்னவெல்லாம் பிரச்சனைகள் இருக்கின்றனவோ மற்றும் வாய்ப்புகள் தெரிகின்றனவோ அவற்றை அன்னையோடு சம்பந்தப்படுத்தி நாம் காட்சிகளை மனதில் பார்க்கலாம். அந்த காட்சிகள் நிஜமாகி, நாம் விரும்பும் பலனை நமக்குக் கொடுக்கும். அந்த அடிப்படையில் கீழ்க்கண்ட வாழ்க்கை பிரச்சனைகளுக்கு ஏற்ற காட்சிகளை நம் மனதில் கொண்டு வந்து நல்ல பலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கடனுக்கு ஆளாகியுள்ள அன்பர்கள் தானும் தனக்குக் கடன் கொடுத்த மற்றவர்களும் அன்னை முன் நிற்பது போலவும், தான் பட்ட கடனுக்குண்டான தொகையை அன்னை அந்த கடன்காரர்களுக்குப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ திருப்பித் தருவது போலவும், அவர்களும் அன்னைக்கு நன்றி சொல்லி பணத்தைப் பெற்றுக் கொண்டு செல்வது போலவும் பார்க்கலாம்.

2. புதிதாக ஒரு வீடோ மற்றும் அடுக்குமாடி குடியிருப்போ வாங்க விரும்புகின்றவர்கள் அன்னையே அவர்களை அப்படி ஒரு வீட்டிற்கோ, குடியிருப்பிற்கோ அழைத்துச் செல்வது போலவும்,

புது வீட்டிற்குண்டான சாவி மற்றும் பாத்திரங்களை அவ்விடத்திலேயே அன்னை அவர்களிடம் கொடுப்பது போலவும் கற்பனை செய்யலாம்.

3. குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதியர் அன்னையே அவர்களிடம் அவரவர் விருப்பத்திற்கேற்ப பிறந்த ஒரு நாளான ஆண் அல்லது பெண் குழந்தையை அவர்கள் கையில் கொடுப்பது போன்றும், அவர்கள் சந்தோஷமாக வாங்கிக் கொள்வது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

4. திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றவர்களுக்கு விருப்பத்திற்குத் தடையாக எதிர்ப்புகள் எழும்பினால் அவ்வெதிர்ப்புகளை முறியடிக்கும் வகையில் அன்னை முன் நின்று மாலை மாற்றிக் கொள்வது போலவும், அன்னை கொடுக்கின்ற மோதிரங்களை இருவரும் அன்னையிடமிருந்து வாங்கி ஒருவர் கையில் மற்றொருவர் அணிவிப்பது போலவும் பார்க்கலாம்.

5. தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்க விரும்பும் மாணவ, மாணவிகள் அன்னையிடம் ஒரு வெற்று மதிப்பெண் பேப்பரைக் காண்பிப்பது போலவும், அவர்கள் விரும்புகின்ற மதிப்பெண்களை அன்னையே எழுதி மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு தன் கையெழுத்திட்டு ஆசீர்வதித்துத் திருப்பித் தருவது போலவும் பார்க்கலாம்.

6. வெளிநாடு செல்ல விரும்பும் அன்பர்கள் அன்னையிடம் தன்னுடைய பாஸ்போர்ட்டை காண்பிப்பது போலவும் அந்த பாஸ்போர்ட்டில் அவர்கள் எந்த நாட்டிற்குச் செல்ல விரும்புகின்றார்களோ அந்த நாட்டு விசாவை அன்னை முத்திரையிட்டு தன் கையெழுத்திட்டு திருப்பி தருவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.



7. உறவில் சுமுகம் கெட்டுப் போய்விட்ட நிலையில் இருப்பவர்கள் யாரோடு மீண்டும் அந்தச் சுமுகத்தை பெற விரும்புகின்றார்களோ அவர்களும் தானும் அன்னை முன் நிற்பது போலவும், அன்னை அவர்கள் இருவரிடமும் அன்பாகப் பேசி சமாதானம் செய்வது போலவும், அதனால் பழைய சுமுகம் மீண்டும் மலர்வது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

8. பணம், நகை, பாஸ்போர்ட், கிரெடிட் கார்டு மற்றும் கைபேசி போன்ற முக்கியமான பொருட்களையும், ஆவணங்களையும் தொலைத்தவர்கள் அன்னையே அந்தப் பொருட்களை பத்திரமாகத் திருப்பித் தருவது போலவும், இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

9. உடல்நலம் குன்றியிருப்பவர்கள் தங்கள் தலைமேல் அன்னை தன்னுடைய கையை வைத்து ஆசீர்வாதம் செய்வது போலவும், அன்னையின் கை வழியே அவருடைய ஒளி தங்களுடைய உடம்பில் இறங்கி நோயைக் குணப்படுத்துவது போலவும், மீண்டும் பழைய தெம்பு திரும்பி வருவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

10. தங்களுடைய வியாபாரம் மற்றும் தொழிற்கூடங்கள் போதிய ஆர்டர் இல்லாமல் மந்தமாக இருக்கின்ற நிலையில் உள்ளவர்கள் நிறைய ஆர்டர்கள் கொடுக்கக்கூடிய கஸ்டமர்களுடன் அன்னை தங்களுடைய அலுவலகங்களுக்குள்ளும், தொழிற்கூடங்களுக்குள்ளும் நுழைவது போலவும், இதன் பலனாக வியாபாரமும், தொழிற்கூடமும் மீண்டும் சுறுசுறுப்பு அடைவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

11. சரியான சாலை பராமரிப்பு இல்லாத இடங்களில் குடியிருக்கின்ற அன்பர்கள் சாலை போடும் பணியாளர்களுடன் அன்னை அங்கு

வந்து அவர்களை சாலை போட வைப்பது போலவும், மின் தடையால் அவதிப்படுகின்ற அன்பர்கள் அன்னை வீட்டுக்குள் நுழையும் பொழுதே மின்சாரம் மீண்டும் வருவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம்.

12. சில காரணங்களால் வருத்தத்திலும், சோகத்திலும் ஆழ்ந்து இருக்கின்ற அன்பர்கள் சின்னஞ்சிறு குழந்தை போல் அன்னை மடியில் அமர்ந்திருப்பது போலவும், தாய்மார்கள் குழந்தைகளைச் சமாதானப்படுத்துவது போல அன்னை தங்களுக்கு ஆறுதல் சொல்லுவது போலவும் கற்பனையாகப் பார்க்கலாம். இதனால் தங்களுக்கு மீண்டும் சந்தோஷம் வருவது போலவும் பார்க்கலாம்.

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சுதந்தரத்தை உறுதியாக நாடலாம். பிடிவாதமாக நாட முடியாது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தவணையில் பெற்றால் கட்ட வேண்டும் என்ற கடமை ஏழ்மையைக் கடக்கும்.

இல்லாததைக் கேட்பது ஏழ்மை.

இருப்பதைப் பெற முயல்வது அதிர்ஷ்டம்.





## P.129 And still it keeps the habit of its birth

**பிறந்த பழக்கத்தை மறவாத மனநிலை**

- ☆ முரண்பாட்டை முழுமனதுடன் ஏற்பது நம் வழி.
- ☆ அழியும் இவ்வுலகின் முரடான மூலம்
- ☆ வாழ்வோ, மனமோ, நெஞ்சோ நிலையில்லை.
- ☆ அறிவுக்கெட்டாத சூன்யம் அமைத்து அருளிய உலகம்
- ☆ ஜடமான உலகம் தவிர நிலையானதொன்றில்லை,
- ☆ வானமும், மலையும், கடலும் விரும்பி ஏற்ற ஐக்கியம்
- ☆ இளம் தெய்வங்கள் ஆத்ம விடுதலையை ஆர்வமான நாடின
- ☆ உயிரற்ற பொருட்களில் உறக்கமாக உள்ளுறைந்தது.
- ☆ அனைத்தையும் இழந்த பேரலங்காரம், சிறப்பையிழந்த அழகு,
- ☆ செவிட்டுக் காதின் அமைதி, கேளாத சப்தம் அழிக்காத அமைதி,
- ☆ சொல்லப்படாத பாரம் சொற்கடந்த துன்பம்
- ☆ தேவையற்ற லோகத்தின் தெய்வீக அருள்;
- ☆ உணரவோ, உணர்ந்து ஏற்கவோ எவரும் அங்கிலர்.
- ☆ கனத்த பாரம் கண்டுகொள்ளாத உணர்வின் துடிப்பு
- ☆ சிருஷ்டியின் சிறப்பான வேகம் கட்டுப்படாத கலன்:
- ☆ ஜடத்தின் ஜீவனற்ற சுமுகத்தில் தன்னை இழக்க முடியாத நிலை,
- ☆ கல்லாய் சமைந்த கடவுளிழந்த ஆத்ம நிலை.
- ☆ உலகை நீத்த சமாதி தேடியலையும் பார்வை,

☆ விழிப்பான இதயத்தின் வேகமான சலனம்,

☆ எண்ணமும், சொல்லும், எழுச்சியின் அன்பும் மகிழ்விழந்து வாடி உதிரும்,

☆ உணர்வற்ற ஊமை உருளும் இரவும், பகலும்

☆ ஏக்கம் எதிர்பார்ப்பாய் எழுவதற்குக் காத்திருக்கும்.

☆ இருளாய் அமைந்த ஜடம் ஏற்றமாக வீற்றிருப்பதைத் தொட்டு அசைத்தது,

☆ ஞானத்தின் மௌனம் நடுங்கிக் கூறும் நாமம்,

☆ உணர்வற்ற அச்சை ஊடுருவ வாழ்வு பெறும் அழைப்பு

☆ தெய்வம் முரடனாகக் கண் விழித்தது.

☆ உருளும் ஊமை உலகம் எழுப்பும் குரல்,

☆ கேட்டறியாத சூன்யத்தில் கேட்கும் முனகல்.

☆ இறந்ததின் ஆழத்தில் எழுந்த ஏதோ ஒன்று:

☆ விழித்தறியாத வாழ்வு, மகிழ முடியாத மனநிலை,

☆ அறிய முடியாத ஆதியினின்று உறங்கும் தோற்றம் பெற்றது.

☆ உள்ளுறை சத்தியத்தை உணர்ந்த உண்மை,

☆ மறந்த மகிமையையும், இழந்த உரிமையையும் நினைவுகூர்ந்து,

☆ அறியவும், ஆர்வமெழவும், அனுபவிக்கவும், வாழவும் விழையும்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நாம் போடும் கணக்குத் தப்பாகப் போகலாம்; அன்னை தவறுவதில்லை.



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 50. செய்த தவறு சரியாக மாறுவது, நிலை உயர்கிறது

- தவறு செய்தால் தண்டனை அனுபவிக்க வேண்டும்.
- மனிதர் தவற்றை மன்னிப்பதுண்டு.
- வாழ்வுக்கு மன்னிக்கத் தெரியாது. இருப்பினும் அதனால் தண்டிக்காமலிருக்க முடியும்.
- பாவ மன்னிப்புக் கேட்பதையும், அதை ஏற்பதையும் கேள்விப்பட்டுள்ளோம்.
- தரும புத்திரரானாலும், பொய் சொன்னால் தேர்ச் சக்கரம் இறங்கும் என்பது சட்டம்.
- செய்த தவறு சரியாக மாறுவது உலகம் அறியாதது.
- இதற்கு அன்பர் வாழ்வில் உதாரணம் கூற முடியும்.
- அதனால் நாம் தவறு செய்யலாம் எனப் பொருளில்லை.
- தண்டனை, செய்த காரியத்திற்கு வருவதைவிட செய்த நோக்கத்திற்கு வருவதால் மனிதன் தவற்றை நாடக் கூடாது.
- செய்த தவற்றை மீறியும் பலன் வரும் என்பது உலக அனுபவம்.
- **தவறு மாறி சரியாகிறது என்றால் அப்படிப்பட்ட சக்தியை உலகில் கேள்விப்பட்டதில்லை.**
- அதுவே பூரணயோக தத்துவம்.
- இருள் என்பது இல்லை, நம் பார்வைக்கு அருள் இருளாகத் தோன்றுகிறது என்பது தத்துவம்.
- அப்பார்வையை ஏற்பது சத்தியஜீவியத்தை ஏற்பது.

- தவற்றையும், சரியையும் கடந்த சக்தியுண்டு.
- தவறு அதனுள் நுழைந்தால் தவறாக இராது. மாற விரும்பினால் சரியாகும்.
- சத்தியஜீவியம் அப்படிப்பட்ட சக்தி.
- எலிசபெத் டார்சியை அவதூறாகத் திட்டினாள்.
- பெம்பர்லியில் பார்த்தபொழுது அவன் அவள் திட்டியதைப் பாராட்டாமல் பழகினான்.
- லிடியா, ஜேன் திருமணத்திற்குப் பின் அவளைச் சந்தித்த பொழுது அவளைச் சந்தித்த முதல் சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்தான்.
- அவளுக்கு லஜ்ஜையாய்விட்டது. அதைப் பற்றிப் பேச வேண்டாம், வெட்கமாயிருக்கிறது என்றாள். தவறு செய்துவிட்டேன் அப்பொழுது என்றாள்.
- **அது எப்படித் தவறாகும், எனக்குப் புத்திமதி கூறினாய், அதனால்தான் திருந்தி நான் இன்று மனிதனாகியிருக்கிறேன் என்றான்.**
- அவள் செய்த தவறு அவனுடைய மனநிலையில் சரியானதாகப்பட்டிருக்கிறது.
- இது உலகில் நடப்பதில்லை.
- அன்பர்கட்கு அடிக்கடி நடக்கிறது.
- எவருக்கு இது நடக்கிறதோ, அவருக்கு அது பூரணயோக வாயில்.
- செய்த தவறு அனுபவம் தந்து அதன் மூலம் பலன் வரும்.
- ஓரிடம் தவறு செய்தால் அதற்குச் சமமாக வேறிடத்தில் பலன் எழும்.
- ஒருவருக்குத் தவறு செய்தவர் தவற்றுக்குரிய தண்டனையை அனுபவிக்கும்பொழுது தவறிழைக்கப்பட்டவர் வாழ்வு மாறி,



**இனி இது போன்றவர் அவர் வாழ்வில் வர முடியாத நிலை ஏற்படும்.**

- மிஸஸ். பென்னட் செய்த தவறு என்ன என்று அவர் அறியவில்லை.
- மிஸ்டர் பென்னட் செய்த தவற்றை உணர்ந்து மாறி, அதற்குரிய பலனைப் பெற்றார்.
- லேடி காதரீனுக்கு எதுவும் புரியவில்லை. எல்லாம் போய்விட்டது.
- காரலின் அவசரமாக ஆனால் ஆனந்த ஆர்ப்பாட்டத்துடன் மாறிக் கொண்டாள்.
- தவறு சரியாவது இவையல்ல.
- அது சத்தியஜீவியம் செய்வது.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இரகஸ்யம் சொல்லாததில் இருக்கிறது. சொல்லாததைச் சொல்வது அருள். அருளை அருளாகப் பெற்று, கர்மத்தைக் கரைத்து, திறமையை வெளிப்படுத்தலாம். அருள் வந்து கர்மத்தைக் கரைக்கும் பொழுது திறமையைக் கைவிட்டு அருளைப் பேரருளாக்குதல் நன்று.

***நம்பிக்கை அருளைத் தரும்.***

***நம்பிக்கையை இழப்பது பேரருளைத் தரும்.***

# டாக்டர் சம்பையா

சமர்ப்பணன்

டெல்லியில் வெளிநாட்டு வங்கி ஒன்றில் துணை மேனேஜராக வேலை பார்க்கும், மாதம் இலட்ச ரூபாய்களுக்கு மேல் சம்பளம் வாங்கும், இருபத்தியெட்டு வயது விமலா ஒரு மாத விடுமுறையில் சென்னைக்கு வந்து என்னோடு தங்கி இருந்தாள். நானும் ஒரு மாதம் என் சொந்த அலுவலகத்திற்கு மட்டம் போட்டுவிட்டு அவளோடு பேசுவது ஒன்றையே என் வாழ்வின் அப்போதைய குறிக்கோளாகக் கொண்டிருந்தேன்.

அவள் சென்னைக்கு வந்த மூன்றாவது நாள் என் கால்களில் முட்டிக்குக் கீழே தோல் பல இடங்களில் கறுத்திருப்பதைக் கவனித்துவிட்டுப் பதறிப்போனாள். உடனே அவள் அப்பாவிடம் போனில் பேசி தோல் வியாதி நிபுணர் ஒருவரின் விலாசத்தை வாங்கியவள், கையோடு என்னை அவரிடம் அழைத்துக் கொண்டு சென்றாள்.

யாருமே இல்லாமல் தனியாக ஒரு சிறிய இருட்டறையில் உட்கார்ந்திருந்த தோல் வியாதி நிபுணர் டாக்டர் சம்பையாவின் முன்னால் நானும், விமலாவும் நின்றோம். டாக்டர் வெள்ளை நிறத்தில் கை வைத்த பனியன் போட்டுக் கொண்டு மேஜை விளக்கு வெளிச்சத்தில் தடிமனான மருத்துவப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

டாக்டர் சம்பையா தன் தலையைத் தூக்கி மூக்கின் நுனியில் தொற்றிக் கொண்டிருந்த கண்ணாடி வழியாக, ‘ஏண்டாப்பா நான் புத்தகம் படிப்பதை தொந்தரவு செய்கிறாய்?’ என்பது போல என்னைப் பார்த்தார். என் பின்னால் நின்று கொண்டிருந்த



விமலாவை ஒரு முறை பார்த்தார். “யாருக்குப் பிரச்சனை?” என்று கேட்டார்.

“எனக்குத்தான் சார். என் பெயர் சந்துரு” என்றேன்.

‘‘அப்படியா? இந்த ஸ்டூலில் உட்காரப்பா’’ என்றவர், விமலாவைப் பார்த்து, “பாப்பா, அந்த விளக்கையும், பேனையும் போடம்மா” என்று உத்தரவிட்டார்.

“பாப்பா யார்? உன் சம்சாரமா?” என்று கேட்டார்.

“இல்லை சார்” என்றேன்.

“உன் தங்கையா?” என்று கேட்டார்.

“சேச்சே, இல்லை சார்” என்றேன்.

“அதுவுமில்லையா? சரி, உனக்கு என்ன தொந்தரவு?” என்று கேட்டார்.

“அதாவது சார், அது வந்து சார், காலில் தோல் மீது கறுப்பாக திட்டு திட்டாக இருக்கிறது. சில சமயம் அரிக்கிறது” என்றேன்.

‘‘கால்சட்டையைக் கழற்று’’ என்றார். விமலா சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

“வேண்டாம் சார், முட்டிக்குக் கீழே மட்டும்தான் இருக்கிறது” என்றவாறு கால் முட்டி வரை கால்சட்டையைத் தூக்கிவிட்டேன்.

சற்று நேரம் அந்தக் கறுப்பு திட்டுகளை உற்றுப் பார்த்தவர், “எத்தனை நாட்களாக இருக்கிறது?” என்று கேட்டார்.

‘‘கொஞ்சம் நாட்களாகத்தான்’’ என்று நான் கூற, விமலா, ‘‘ஆறு மாதங்களாக இருக்கிறது’’ என்று குறுக்கிட்டு மறுத்தாள். எரிச்சலுடன் அவளைப் பார்த்து முறைத்தேன். என் எரிச்சலை அவர்கள் இருவருமே சட்டை செய்யவில்லை.

‘‘அரை வருஷமாக என்னென்ன மருந்துகள் போட்டாய்? இங்கே எப்படி வந்தாய்?” என்று கேட்டார்.

விமலா முந்திக் கொண்டாள். “இவர் எந்த விஷயத்தையும் யாரிடமும் சொல்லமாட்டார். பிரச்சனை வளர்ந்து சிக்கலாகும் வரை

ஒன்றும் செய்யமாட்டார். தோல் பிரச்சனையையும் அதே போல வளர விட்டுவிட்டார். நீங்களே பாருங்கள் சார், எவ்வளவு மோசமாக இருக்கிறது! நான்தான் உங்களைப் பற்றி சொல்லி இங்கே கூட்டி வந்தேன். உங்களைப் பற்றி என் அப்பா நிறைய சொல்லி இருக்கிறார். இவருக்கு மருந்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் உங்களைப் பார்த்தால் சரியாகிவிடும் என்று நான்தான் கூட்டிக்கொண்டு வந்தேன்'' என்று ஆதங்கத்துடன் சொன்னாள் விமலா.

"ஏம்பா, சுத்தமான இடத்தில்தானே வேலை பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

''நான் ஆடிட்டர். என் அலுவலகம் மிகவும் சுத்தமாக இருக்கும். நானும் எப்போதும் சுத்தமாகத்தான் இருப்பேன்'' என்றேன்.

"சரி, உன் குடும்பத்தில் யாருக்காவது அலர்ஜியோ, அல்லது இதே மாதிரி பிரச்சனையோ உண்டா?'' என்று கேட்டார்.

"இல்லை சார்" என்றேன்.

"அந்த மாதிரி இடங்களுக்குப் போகும் பழக்கமுண்டா?" என்று கேட்டார்.

"எந்த மாதிரி இடங்களுக்கு?" என்று புரியாமல் கேட்டேன்.

''அதுதாம்பா, சிவப்பு விளக்கு என்பார்களே! அங்கே போனால் இந்த மாதிரி சீக்கெல்லாம் வரும்" என்றார் டாக்டர்.

"பாவம் சார், இவருக்கு போக்குவரத்து சிக்னலில் இருக்கும் சிவப்பு விளக்கு தவிர வேறு எதுவும் தெரியாது. பேச்சுதான் கொஞ்சம் கூடுதலாக முன்னே பின்னே இருக்கும். மற்றபடி இவருக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது" என்று எனக்காகப் பரிந்து பேசினாள் விமலா.

''உனக்கு இந்த மாதிரி தோல் வியாதி உண்டா?'' என்று விமலாவைப் பார்த்துக் கேட்டார்.

களுக்கென்று சிரித்தாள் விமலா. "எனக்கு இல்லை. எங்கள் இருவருக்கும் இடையில் உள்ள உறவு கண்ணியமானது" என்றாள்.



எனக்கு விஷயத்தைப் புரிந்து கொள்ள சிறிது நேரம் பிடித்தது. மீண்டும் மூண்ட எரிச்சலால் முகம் சிறிது சிணுங்கியது.

''உன்னைப் பார்த்தால் நல்ல பெண்ணாகத் தெரிகிறது. இவரைப் பார்த்தால் கொஞ்சம் விவகாரப்பட்ட ஆள் போலிருக்கிறார். அதனால்தான் கேட்டேன்" என்றவர், "பெரிய பிரச்சனை ஒன்றும் இல்லை. நான் சொல்வது போல் செய்தால் நான்கு நாட்களில் சரியாகிவிடும்" என்றார்.

"தோல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை எதுவும் பண்ண வேண்டியதில்லையா?" என்று கேட்டேன்.

''நீ டாக்டரா, நான் டாக்டரா?'' என்று கேட்டவாறு ஒரு காகிதத்தில் எதையோ எழுதி நீட்டினார் டாக்டர் சம்பையா.

"எரிச்சலை தவிர்க்கவும், இனிமையாக இருக்கவும்" என்று எழுதியிருந்தது.

"மருந்து?" என்று கேட்டேன்.

"அதுதான் மருந்து" என்றார்.

"புரியவில்லை சார்" என்றேன்.

''வியாதிகளை மருந்து, அறுவை சிகிச்சை, பிரார்த்தனை, மந்திரம், பரிகாரம் என்று எத்தனையோ வழிகளில் தீர்க்கலாம். அலோபதி டாக்டரைக் கேட்டால், அலோபதியைத் தவிர வேறு எதையும் காதில் போட்டுக் கொள்ளமாட்டார். நாட்டு வைத்தியர் அலோபதி டாக்டரைப் பார்த்தால் நமுட்டுச் சிரிப்பு சிரிப்பார். யோகிகள் மருந்து மனிதனின் அறியாமை என்பார்கள். நோயாளிதான் பாவம், இந்தச் சண்டைகளைப் பற்றி அவருக்கு என்ன கவலை? அவருக்கு நோய் தீருவதுதானே முக்கியம்?'' என்று கேட்டார் டாக்டர்.

"சார், நீங்கள் இலண்டனில் முப்பது வருஷங்கள் வேலை பார்த்தவர். உங்களுக்கு அலோபதியைத் தவிர மற்ற முறைகளில் கூட நம்பிக்கை உண்டா என்ன!" என்று ஆச்சரியப்பட்டாள் விமலா.

''என்னிடம் வரும் நோயாளிகளின் கஷ்டம் நிச்சயமாகத்

தீருமென்றால் நான் எதை வேண்டுமானாலும் நம்புவேன். என்னைப் பொறுத்தவரை நோயாளியின் கஷ்டத்தை எந்த வழிமுறை தீர்க்கிறதோ அதுதான் அறிவு. மனித அறிவு வளர்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைக்கு நாம் அறிவு என்று நம்புவது நாற்பது வருஷங்கள் கழித்து அபத்தமாகத் தோன்றுகிறது. வழிமுறை அபத்தமா இல்லையா என்பது ஆளுக்காள் மாறும்'' என்றார் டாக்டர்.

''எந்த வழிமுறை பலிக்கும் என்பதை எப்படி முடிவு செய்கிறீர்கள், டாக்டர்?'' என்று கேட்டேன்.

''கவனமாக இருக்க வேண்டிய இடம் அதுதான். உடல் தன்னைத் தானே குணப்படுத்தி கொள்ளகூடியது. நம் சந்தேகங்கள்தான் அதற்கு எதிரி. உடம்பு விஷயத்தில் நீக்குபோக்காக இருக்க வேண்டும். பிடிவாதமோ, முரட்டுத்தனமோ இருக்கக்கூடாது. நம் மனதில் சில எண்ணங்கள் இருக்கும். உணர்வில் சில பிடிவாதங்கள் இருக்கும். அதையெல்லாம் பொருத்துதான் சிகிச்சை முறையை தீர்மானிக்க வேண்டும்'' என்றார் டாக்டர்.

''நாம் என்ன நினைத்தால் என்ன? நம்பினால் என்ன? மருந்து சாப்பிட்டால் குணமாகாதா?'' என்று கேட்டாள் விமலா.

''மருந்து மட்டுமே குணப்படுத்திவிடும் என்றால் இப்போது இருக்கும் விஞ்ஞான வளர்ச்சியில் நோயாளி ஒருவர்கூட உலகத்தில் இருக்கக்கூடாதே? நோய் தீர வேண்டுமானால் நோயாளி ஒத்துழைக்க வேண்டும். தனக்கு நோய் தீர வேண்டும் என்று அவர் நம்ப வேண்டும். ஏம்பா, உனக்கு கால் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறதா?'' என்று கேட்டார் டாக்டர்.

''இருக்கிறது சார், ஆனால்.....'' என்று இழுத்தேன்.

''இந்த ஆனா, ஆவன்னா எல்லாம் என்கிட்டே வேண்டாம்'' என்றார் டாக்டர்.

''மறைவான இடத்தில் இருக்கிறது. பெரிய தொந்தரவு ஒன்றும்



இல்லை. அதனால் தீருமா இல்லையா என்று நான் யோசித்ததே இல்லை'' என்றேன்.

''நோயைப் பற்றி யோசிக்காமல் இருப்பதுவும் நல்லதுதான். யோசித்தால் அதிகமாகிவிடும். பல நோய்கள் வெறும் கற்பனையாலும், பயத்தினாலும், யோசிப்பதாலுமே வருகின்றன. நம் குணத்தினால்கூட நோய்கள் வரலாம்'' என்றார் டாக்டர்.

''மனநோய்களைப் பற்றி சொல்கிறீர்களா?'' என்று கேட்டாள் விமலா.

''அவை வேறு ரகம். குணவிசேஷத்தினால்கூட உடலில் நோய்கள் வரலாம். எந்தக் குணத்தினால் நோய் வரக்கூடுமோ, அந்தக் குணத்தை மாற்றிக் கொண்டால் நோய் தீர வாய்ப்புண்டு'' என்றார் டாக்டர்.

''குணத்தை மாற்ற முயற்சி பண்ணிக் கொண்டு, மருந்து சாப்பிடாமல் இருந்தால் ஆபத்தில் முடிந்துவிடாதோ?'' என்று கேட்டாள் விமலா.

''அதனால்தான் கவனமாக இருக்க வேண்டும் என்றேன். நம் எல்லோருக்குமே பரம்பரையாக மருந்தில் நம்பிக்கை உண்டு. அப்படிப்பட்ட நம்பிக்கை இல்லாதவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நம் சூழ்நிலையில் எது சிறந்த மருத்துவமோ அதை நமக்கு நம்பிக்கை இருக்கும் அளவிற்கு அவசியம் செய்து கொள்ள வேண்டும். கூடவே ஆபத்தில்லாத வழிமுறைகளையும் செய்து பார்த்தால், நோய் சீக்கிரம் குணமாகிவிடும்'' என்றார் டாக்டர்.

''எதை ஆபத்தில்லாத வழிமுறை என்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஒருவன் அடிபட்டு வலியில் துடிக்கும்போது, மருந்து கொடுத்து வலியைக் குறைக்க வேண்டும். கூடவே பிரார்த்தனை செய் என்று சொல்லலாம். அதை விட்டுவிட்டு பிரார்த்தனை செய், மருந்து வேண்டாம் என்று சொல்வது ஆபத்தில் முடியும். உனக்கு தோல் வியாதி குணமாக நீ எந்த அவசரமும்படவில்லை.

மருந்திலும் உனக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் குணத்தை மாற்றும் வழியைச் சொன்னேன்" என்றார் டாக்டர்.

"எந்த நோய்க்கு எந்த குணத்தை மாற்ற வேண்டும்?" என்று கேட்டாள் விமலா.

"எதிர்காலத்தைப் பற்றிய பயம் இருந்தால் சர்க்கரை வியாதி அதிகமாகும். பேராசையைக் குறைத்தால் கேன்சர் கட்டுப்படும். இப்படி ஒவ்வொரு நோய்க்கும் ஆளைப் பொறுத்து ஒரு காரணம் சொல்லலாம். உன் தோல் கறுத்துப்போனதற்கு உன் எரிச்சலும், மன அழுத்தமும்தான் காரணங்கள்" என்றார் டாக்டர்.

''ஏன் சார், இதையெல்லாம் மற்ற டாக்டர்களிடம் சொல்வீர்களா?" என்று கேட்டேன்.

"அதெப்படி முடியும்? சொன்னால் என் மேல் புகார் கொடுத்து, என் டாக்டர் பட்டத்தையே பிடுங்கிவிடுவார்கள்! நீயும் வெளியே சொல்லிக்கொள்ளாதே. நம் கூட இருப்பவர்கள் கோணலாக இருந்து, அவர்கள் மீது நாம் பிரியம் வைத்தாலோ, இந்த வழிமுறைகளைப் பற்றிப் பேசினாலோ நோய் தீர நாளாகும்" என்றார் டாக்டர்.

''இந்த நோய்க்கு இந்த குணம்தான் காரணம் என்று தெரியாவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள் விமலா.

"ஏதோ ஒரு குணவிசேஷம்தான் நோய்க்குக் காரணம் என்று வைத்துக்கொண்டு, அதை மாற்றிக் கொள்கிறேன் என்று மனதிற்குள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் என்ன குணம் என்பது மெல்ல புரிந்துவிடும் அல்லது நோயே தீர்ந்துவிடும்'' என்றார் டாக்டர்.

''நீங்கள் சொல்கிறபடி எரிச்சலை மாற்றிக் கொண்டு, இனிமையாக இருந்தால் அதுவே போதும் என்று சொல்கிறீர்களா?" என்று சிறிது தயக்கத்துடன் கேட்டேன்.

"போதும். ஆனால் இந்த மருந்து போதாது என்று உனக்குத் தோன்றினால், தோல் வியாதி பற்றிய நினைப்பு வரும்போதெல்லாம் இந்த பாப்பாவை நினைத்துக் கொள்" என்றார் டாக்டர்.



விமலாவின் முகம் மலர்ந்தது.

"விமலா என்ன கடவுளா?" என்று கேட்டேன்.

''உனக்கு வியாதி குணமாக வேண்டுமென்று எத்தனை ஆர்வமாக இருக்கிறாள்! உன் மேல் நல்லெண்ணம் வைத்திருக்கும் எல்லோரும் உனக்குக் கடவுள்தான். அவர்களைப் பற்றி நினைத்தால் எரிச்சல் போய்விடும். நோயும் போய்விடும். பாப்பாவைப் போன்றவர்களின் நல்லெண்ணத்தைவிட பெரிய மருந்து எதுவுமில்லை" என்றார் டாக்டர்.

"ஏன் சார், இது பலிக்கவில்லை என்றால் என்ன செய்வது?" என்று கேட்டேன்.

''திரும்பவும் என்னிடம் வா. அலோபதி மருந்து கொடுக்கிறேன்!" என்றவர், பின் திடீரென்று நினைவு வந்தவராக, "பீஸ் ஐம்பது ரூபாய்கள்" என்றார்.

விமலா பணத்தைத் தந்தாள். அதை வாங்கி மேஜை அறையில் போட்டுக் கொண்ட டாக்டர் விமலாவைப் பார்த்து, ''பாப்பா, போகும்போது அந்த விளக்கையும், பேனையும் அணைத்துவிட்டுப் போய்விடம்மா" என்று கூறிவிட்டு, மேஜை விளக்கின் ஒளியில் மீண்டும் தடிமனான மருத்துவப் புத்தகத்தில் மூழ்கிவிட்டார். அவருக்கு வணக்கம் போட்டுவிட்டு இருவரும் வெளியே வந்தோம். அவர் கவனித்தாரா என்று தெரியவில்லை.

நான் இப்போது சொல்லப்போவதை நம்புவது உங்களுக்குச் சிரமமாகத்தான் இருக்கும். மறுநாள் எனக்கு தோல் வியாதி பாதி குணமாகிவிட்டது. ஒரு வாரத்திற்குள் முழுவதுமாக சரியாகிவிட்டது. அதற்குப் பிறகு தோல் வியாதி எனக்கு வரவே இல்லை. சந்தேகமாக இருந்தால் சாட்சியாக இருந்த விமலாவை வேண்டுமானால் கேட்டுப் பாருங்களேன்.

*முற்றும்.*

❋❋❋

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/41) யதார்த்த இலட்சியம் சரியான யுக்தியையும் சரியான குறிக்கோளையும் நாடும்.**

- ☆ **குறிக்கோளும், யுக்தியும் சரியானால் இலட்சியம் யதார்த்தமாகும்.**

- ❋ பகவான் ஸ்ரீ அரவிந்தர் யோகம் பூரணயோகம், ஆன்மீகப் பரிணாம யோகம், அனைத்தையும் உள்ளிட்ட யோகம் எனப்படும்.
- ❋ இந்த யோகத்தில் பல முக்கிய அம்சங்களுண்டு.

1. இதன் முக்கிய நோக்கம் திருவுருமாற்றம்.
2. அதையடையும் வழி சரணாகதி.
3. தீமை நன்மையாக மாறுவது திருவுருமாற்றம்.
4. உலகில் தீமை படைக்கப்படவில்லை.
5. அகந்தையின் கண்ணுக்கு நன்மை தீமையாகத் தெரிகிறது.
6. அகந்தை அழிந்து இயற்கையின் ஆன்மா வெளிவருவது யோகம் பூர்த்தியாவது.
7. மனிதனுக்கு மூன்று அம்சங்களுண்டு.
8. மனிதன், பிரபஞ்சம், பிரம்மம் ஆகியவை அந்த மூன்று அம்சங்கள்.
9. உடலும், உயிரும், மனமும் ஆன்மாவாலாயின.
10. அவற்றுள் புதைந்துள்ள ஆன்மா வெளிவருவது ஆன்மீகப் பரிணாமம்.



11. கடந்ததை விலக்கினால் பூரணமாகாது.
12. வாழ்வு அற்புதமானது என்பது இலட்சியம்.
13. அஞ்ஞானம் சிருஷ்டியில் முதிர்ந்து தீமையாயிற்று.
14. அஞ்ஞானம் ஞானமாவது பூர்த்தியானால் தீமை நன்மையாகும்.
15. பூரணயோகம் பெறும் ஆனந்தம் சச்சிதானந்த ஆனந்தத்தைக் காட்டிலும் உயர்ந்தது.
16. அசைவற்ற ஆனந்தம் வளரும் ஆனந்தமாவது பூரண யோகம்.
17. இது இறைவன் வரும் தருணம்.
18. ஆயிரமாண்டு பலன் அரைக்கணத்தில் பெறும் நேரமிது.
19. அதை அறிவிக்க வந்த இறைவன் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.
20. இறைவன் மனிதனை நாடி வந்து அருள் பாலிக்கும் யோகமிது.

- ❋ யதார்த்தமாக - நடைமுறையில் - பலிக்காத இலட்சியம் இலட்சியமில்லை.
- ❋ இலட்சியம் பூரண சிறப்புடையதானால் அது யதார்த்தம், யுக்தி, இலட்சிய தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும்.
- ❋ மலையினின்று இறங்கி வரும் அருவி ஆறாகப் பெருக எவரும் வழி வகுப்பதில்லை. தானே தன் பாதையை அமைத்துக் கொள்ளும்.
- ❋ மக்கள் வாழ்வை வளப்படுத்தும் ஜீவனுடையது என்பதால் அவற்றை ஜீவநதி என்கிறோம்.
- ❋ ஜீவனற்றது நதியாகாது.
- ❋ மண் பிருத்வி, நீர் அதன் ஜீவன், நெருப்பு அதன் சக்தி,

ஆகாயம் அவற்றைச் சூழ்ந்துள்ள ஜீவன். சப்தம் அனைத்தின் மூலம்.

- பஞ்ச பூதங்கள் சிருஷ்டியாகும். மகத், அகங்காரம் பின்னணியில் உள்ளன. நடுநாயகமானது ஆன்மா. அனைத்து ஜீவியமும் அதன் தொடர்பால் எழுவன.

***

## II/42) வலிமை எளிமையை ஆள்வதால் - குடும்ப வாழ்வு வெற்றி பெற்றதால் - அதுவே சரியான யுக்தி.

**✯ வலிமை வெல்லும் - வலிமை மட்டுமே வெல்லும்.**

- புத்தர் பிறந்த பொழுது ஜோஸ்யர்கள் இந்தக் குழந்தை
  - அரசாட்சியை நாடினால் உலகையாளும்
  - ஆன்மீகத்தை நாடினால் உலகையாளும்

    என்றனர்.
  - புத்தர் பிரயாணம் செய்யும் பொழுது 50 மைலுக்கு அப்பால் அவர் வருவதை மக்கள் அறிவார்கள்.
  - இதுவரை புத்தர் போன்ற பெரிய ஆத்மா பிறந்ததில்லை என பகவான் கூறுனார்.
- புத்தர் பெற்ற வலிமை ஆன்மீக வலிமை.
- நூறாண்டுகட்கு முன் ஒரு ஆங்கிலேய கலெக்டர் சதாவதானியைக் காண விழைந்தார். சதாவதானியை
  - 100 பேர் அடியெடுத்துக் கொடுத்துப் பாடச் சொன்னார்கள்.
  - பலர் கடினமான கணக்குகளைத் தீர்க்கக் கொடுத்தனர்.
  - எவரும் பதிலிறுக்க முடியாத கேள்விகளைப் பலர் கூறினர்.



  - இவையெல்லாம் நடக்கும்பொழுது ஒருவன் நெல்லை மணிமணியாக அவர் தோள் மீது கொட்டினான். முடிந்த பின் அவன் கொட்டிய நெல்லின் எண்ணிக்கையை அவர் கூற வேண்டும்.
  - 100 விதமான கேள்விகளை வரிசைக்கிரமமாகக் கேட்டனர்.

*அனைத்திற்கும் முடிவில் அவர் சரியான விடையை வரிசைக்கிரமமாகக் கூறினார்.*

- இது மனிதனாலோ, மனித மனத்தாலோ என்றும், இன்றும் முடியாதது.

  ஆத்மாவால் என்றும், எந்த வகையில், எந்த நேரமும் தவறாது முடியும்.

*அஷ்டாவதானம், சதாவதானம் எனப்படும்.*

- ஆத்மா ஞாபகத்துள் விழிப்பதால் ஆத்ம ஞானம் இதைச் செய்ய முடிகிறது.
- உலக சரித்திரத்தில் ஆத்மா செயல்படாத நேரமில்லை.

  அனைவரும் அறிந்த நிகழ்ச்சிகள் குறைவு.

  மீண்டும் மீண்டும் நான் அடிக்கடி குறிப்பிடும் அது போன்ற நிகழ்ச்சிகள் மூன்று.
  - 1929இல் ரூஸ்வெல்ட் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்தது.
  - 1940இல் சர்ச்சில் உலகப் போரை வென்றது.
  - 1915 முதல் 1942 வரை மகாத்மா காந்தியின் அகிம்சாவாதம் பலித்தது.
  - சர்ச்சிலுக்கும், சுதந்தர இயக்கத்தில் பகவானுடைய

ஆன்மீக சக்தி செயல்பட்டதை அவரே குறித்துள்ளார்.

- ❊ மனிதனுடைய திறமையுள் ஆன்மா விழித்தால் அது வலிமையாகும்.

  அதை எவராலும் வெல்ல முடியாது.

  எளிமையான ரூபத்தை அது மேற்கொண்டாலும், அதை வெல்ல முடியாது.

- ❊ எலக்ட்ரானிக்ஸுக்கு ஒரு முறை நம் அறிவு அறியும் சட்டத்தைக் கூறிவிட்டால் அது முடிவின்றி அதையே வெளிப்படுத்துகிறது.
- ❊ நிலம் ஆன்மீக விழிப்புப் பெற்றால் உணவுப் பஞ்சம் இராது. டெக்னாலஜியில் ஜடம் ஆன்ம விழிப்புப் பெற்றால் அது சூழலைப் பாதிக்காது.

❊❊❊

**II/43) பற்றாக்குறையில் தேவைகள் பூர்த்தியாவதில்லை. உபரியான நேரத்தில் பொருள்களை முழுவதும் பயன்படுத்த முடிவதில்லை. இரு நேரங்களிலும் பூர்த்தியாகாத தேவை நிலைக்கிறது.**

✫ **தேவையும் விரயமுமில்லாவிட்டால் தெய்வம் செயல்படும்.**

- ◌ பற்றாக்குறை என்பது அறிவு, உணர்வு, திறமை, முயற்சி, சொரணை பற்றாக்குறை.
- ◌ நிறைந்த உள்ளத்திற்கு உலக வாழ்வில் எதுவும் பற்றாக்குறையாக இருப்பதில்லை.
- ◌ அறிவு, உணர்வு, திறமை, முயற்சி, சொரணை நிறைவாக இல்லையெனில் ஜீவன் சிறியது எனப் பொருள்.
- ◌ நிறைவு என்பது மனநிறைவு.



- ◌ சிறிய ஜீவன் ஆர்வத்தால் பெரிய ஆத்மாவாகும் புற உபாயம் பற்றாக்குறை.
- ◌ மு.வ.வின் பரிசு பெற்ற நாவல்களில் *'அகல் விளக்கு'* ஒன்று. இதன் கதாநாயகன் சந்திரன். வேலு அவன் நண்பன். கூரிய அறிவும், கவர்ச்சி மிகுந்த அழகுமுள்ள சந்திரன், உத்தமப் பெற்றோருக்கு, செல்வத்தில் பிறந்து, காண்பவரெல்லாம் பாராட்டும்படி வளர்ந்தான். கல்லூரி வாழ்வில் தற்செயலாய் சந்தித்த பெண் பிரியமாகப் பழகியதை மனதால் காதலாக உருவாக்கி, அவள் திருமணத்தன்று ஓடிப்போய், தேயிலை எஸ்டேட் கூலியாகி, அங்கு வயதில் பெரியவள் வாழாவெட்டியுடன் வாழ்ந்து, வீட்டார் அழைத்து வந்து உத்தம திருமணம் செய்தபின் பொலிகடாவாக அலைந்து, மனைவி தற்கொலை செய்த அன்று ஓடிப்போய், தொழுநோயால் இறந்தான். நமக்குரிய கருத்துகள் இங்கே:
  - ✦ பற்றாக்குறை நிபந்தனையான வாய்ப்பு.
  - ✦ வளமும், அன்பும், பண்பும் வளரும் வாய்ப்பு.
  - ✦ அப்படிப்பட்ட வாய்ப்பில் தன் வாழ்வைக் கெடுத்து, உயிரை விடச் செய்தது அவனுடைய போக்கு (human choice).
  - ✦ உயர்ந்த வாய்ப்பின் பெருமையை அறிய உயர்ந்த நோக்கம் தேவை.
  - ✦ கதை சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.
  - ✦ மு.வ. நாட்டின் பண்பாட்டை அறிந்து உயர்வை எடுத்துக் கூறுகிறார்.
  - ✦ செல்வம், பண்பு, படிப்பு, வாய்ப்பு, சூழல் அமைந்த-போதிலும் மனித முடிவே (choice) வாழ்வின் முடிவை நிர்ணயிக்கும்.
  - ✦ அவன் நண்பன் வேலுக்கு அறிவில்லை, அழகில்லை,

வசதியில்லை, ஓர் ஆண்டு பெயிலாகி, முறையாகப் படித்துத் தேறி உத்தியோகம் பெற்று விரும்பிய பெண் கிடைக்கும் சூழலில் கேட்க தைரியமின்றி அத்தை மகளைத் திருமணம் செய்து நல்வாழ்வு வாழும் பொழுது சந்திரன் அவன் வீட்டில் வந்து மனம் மாறி வருந்தி சாகிறான்.

- ✦ பற்றாக்குறை முன்னேற்றம் தருகிறது.
- ✦ செல்வம், பண்பு, கல்வி, அறிவு, சொத்து, அன்பு உபரியாக இருந்து கதாநாயகனை அழிக்கிறது.
- ✦ சிறிய ஆத்மாவுக்குப் பற்றாக்குறையும், பெரிய ஆத்மாவுக்கு நிறைவையும் வளரும் வாய்ப்பாக இயற்கை அளிப்பது வழக்கம். தவறாது இந்த உபரியை அளித்து மகிழ்விப்பது இயற்கையின் ஒரு சட்டம்.
- ✦ அன்னை அதே சட்டத்தை அபரிமிதத்தை கொசுறு ஆகும்படி ஏராளமாகப் பொழிகிறார். அதைப் பயன்படுத்தி முன்வந்தவர் 26 பேரில் என் அனுபவத்தில் ஒருவரும் இலர்.
- ✦ பெரிய வாய்ப்பைப் பெரிய பரந்த மனத்தோடு பெற்றுயர்ந்தால் பெறுவது இம்மைப் பேறில்லை. உலகம் அறியாத இம்மைப்பேற்றை தன்னுட் கொண்ட மானுடப்பேற்றை அன்னை இல்லற வாழ்வில் தருகிறார்.
- ✦ இந்தியாவுக்கு அந்த வாய்ப்பை வற்புறுத்தி அன்னை அளிப்பதை 1947 முதல் 1987 வரை உலகம் அறியவில்லை. 1987க்குப் பின் அதைப் பார்க்கத் தவற முடியாது என வாழ்க்கை விளக்குகிறது. அதுவே நான் திரண்ட செல்வம் எனக் கூறுவது. அதன் அம்சங்களில் அத்திரண்ட செல்வமே மிகச் சிறியது.

✲✲✲



## II/44) நமக்குள்ள எல்லாப் பொருள்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வாழ்வு பூரணமானதாக இருக்க வேண்டும்.

☆ **அனைத்தையும் பூர்த்தி செய்யும் அன்னை.**

- ❂ 1947இல் சுதந்தரம் வந்தபொழுது நாடு ஏழை நாடாக இருந்தது.
- ❂ சுபிட்சம் வேண்டும் என்பதே அன்று அனைவருடைய குறிக்கோள்.
- ❂ முதல் 40 வருஷம் ஏழ்மை குறைந்து வந்தது. அது எவர் கண்ணிலும் படவில்லை.
- ❂ சுபிட்சத்திற்காகப் பல வகையான அடிப்படைகளை இட்டனர். சுபிட்சம் கண்ணுக்குத் தெரியவில்லை.
- ❂ இன்று நமக்கும் புரியும் சுபிட்சம் இந்த 40 ஆண்டு செய்த அபிவிருத்திக்கான முயற்சியால்தான்.
- ❂ 1947இல் 25 பைசாவாக இருந்த கூலி 1000 மடங்கு உயர்ந்து இன்று 250 ரூபாயாக இருக்கிறது.
- ❂ இன்றும் இளைஞர்கள், பட்டதாரிகள் 5 ஆயிரம், 10 ஆயிரம் சம்பாதிக்க சிரமப்படுகின்றனர்.

  வேறு பட்டதாரிகள், இளைஞர்கள் 20 ஆயிரம், 50 ஆயிரம் சம்பாதிக்கும்பொழுதும் இதுவே நிலை.
- ❂ வாழ்வு பூரணமாக இருக்க வேண்டுமானால் 5 ஆயிரம், 10 ஆயிரம் சம்பாதிப்பவர் 10 ஆயிரம், 20 ஆயிரம் சம்பாதிக்க வேண்டும். அவருள் சிறப்பானவர் ஒரு இலட்சம், 2 இலட்சம் சம்பாதிக்க வேண்டும்.
- ❂ இதற்குண்டான முறையுண்டா? அன்பரல்லாதவருக்கும் அது உண்டா? உண்டு எனில் அன்பருக்கு எது உண்டு?
- ❂ இளைஞர்களை 20 முதல் 25 வயதுள்ளவரை இளைஞர்கள்

எனவும், அவர்களைப் பட்டதாரிகள், மற்றவர் எனவும் பிரிக்கலாம்.

- வாழ்வு கடுமையானது, கரணம் தப்பினால் மரணம், இருப்பதைக் காப்பாற்றினால் போதும், ஆசைப்படக்கூடாது, பேராசைப்படக் கூடவே கூடாது, ஆட்டிற்கும் வால் அளவோடு வைத்திருக்கிறான் என்பவை 1947 வரை இருந்த நம்பிக்கைகள். இன்றும் இச்சொற்கள் அடிக்கடி காதில் விழும்.
- காலம் மாறிவிட்டது. சமூகம் மனிதனுக்கு எதிரியில்லை. முன்னுக்கு வர முயலும் எந்த மனிதனுடைய முயற்சியையும் சமூகமும் சர்க்காரும் பூர்த்தி செய்ய முனைந்துள்ளனர். மற்றவர்க்கும் பல்வேறு வகையான உதவிகள் புதியது புதியதாக வந்துள்ளன.
- காலம் மாறி உயர்ந்துவிட்டது. செய்யும் காரியங்கள் பெரும்பாலும் கூடிவருகின்றன. எதிர்பார்த்ததற்கு மேலும் கூடிவருகின்றன. மார்க்கட் வளர்கிறது. முயற்சியுள்ள மனிதனுக்கு நல்ல காலம் வந்துள்ளது. இந்தக் காலத்தில் ஒருவன் முன்னுக்கு வராவிட்டால், அது அவனுடைய பொறுப்பே என பெரும்பாலோர் அறிகிறார்கள். அதன்படி பலன் பெறுகிறார்கள்.
    - அப்படிப்பட்டவர் 1000 ரூபாய் சம்பாதிக்க சிரமப்பட்டவர் இன்று 5000 சம்பாதிக்கிறார்கள். அவர்கள் 10 ஆயிரம் பெறலாம். முயற்சியின் தரத்தைப் பொறுத்து ஒரு இலட்சமும் பெறலாம். அதையும் இரு மடங்காக்கும் வழியுண்டு.
- மனிதன் படிப்பு, திருமணம், வேலை பெற்று குடும்பம் நடத்துபவனுக்கு வருமானம், வெற்றி, அபிவிருத்தி, முன்னேற்றம், நிம்மதி, சந்தோஷம், குடும்ப சந்தோஷம் எனப் பல இலட்சியங்களுண்டு. இதைக் கடந்து பிரபலம், அந்தஸ்து,



பொது வாழ்வில் முன்னேற்றமுண்டு.

    - இவற்றுள் மிக எளிமையானது வருமானம்.
    - மிகக் கடினம் சந்தோஷமான குடும்பம்.
- இடைப்பட்ட நிலைகளையும் முடிவான உயர்ந்த நிலைகளையும் ஒதுக்கி, இவ்விரு நிலைக்குரிய சட்டங்களை மட்டும் கூறுகிறேன்.

1. தொழில் எதுவானாலும் மனம் தொழிலில் நிலவும் நேர்மையில் சராசரிக்கு மேலிருக்க வேண்டும் - இது வருமானம் பெறும்.
2. ஒரு தொடர்பு தவறாது பிறர் கோணத்தில் மட்டும் காரியங்களைச் செய்வது குடும்ப சந்தோஷம் பெற்றுத் தரும். இதனுள் மேற்சொன்ன வருமானம் அடக்கம்.

- அன்பருக்குரியது அடுத்த கட்டத்திற்குரியது. அன்பரல்லாதவர் கையாளும் முறைகள் அன்பருக்கு இரு மடங்கு முதல் இருபது மடங்கு வரை வருமானத்திலும், சந்தோஷத்திலும் தரும். அவருக்குரிய நிபந்தனை:

*அன்னையை மனம் தானே எந்த நேரமும் விரும்பி அழைப்பவர் அன்பர் என்ற இலட்சணத்திற்கு அவர் உரியவரானால், மனத்தின் அமைதியைக் கடந்து நெஞ்சத்தின் மௌனத்தின் ஆழத்திலிருந்து அந்த அழைப்பு சென்று நிரந்தரமாகத் தங்குவது குறைந்தபட்சம் பெறாதவரில்லை. அதிகபட்சம் பெற்றவர் அநேகம் பேர்.*

தொடரும்....

❋❋❋

# அன்பர் கடிதம்

***அன்னை!***

அன்புள்ள அப்பா கர்மயோகி அவர்களுக்கு அநேக கோடி நமஸ்காரங்கள்.

நான் அன்னையை என் வாழ்வில் ஏற்றுக்கொண்டு 9 வருடங்கள் ஆகின்றன. என் வாழ்வில் அன்னை வருகைக்கு பின் எண்ணற்ற மாற்றங்கள். நான் திண்டுக்கல்லில் வசிக்கிறேன். திண்டுக்கல் தியான மையத்திற்கு செல்வேன். அங்கு அன்னையின் சக்தியை நான் மனப்பூர்வமாக உணர்கிறேன். மையத்தில் சில நாட்கள் சேவை புரியும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. மையத்தை கூட்டி துடைத்தேன். 2 மாதங்கள் சேவை புரிந்தேன். பிறகு வீட்டு சூழ்நிலை காரணமாக என்னால் செல்ல இயலவில்லை. அன்னை என் வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்களை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 8 வருடங்களுக்கு முன் எங்களுடைய மாத வருமானம் ரூ.8,000. ஆனால் கடன் 30,00,000 ரூபாய். நாங்கள் அன்னையை இடைவிடாமல் தியானம் செய்தோம். அன்னைக்கு பிடித்த குணங்களை அறிந்து அதன்படி நடந்தோம். அன்னையின் அருளால் இன்று எங்கள் வருமானம் ரூ.50,000 monthly. கடனும் குறைந்துவிட்டது. அன்னை அளவில்லாமல் கொடுப்பவர். அவர் கொடுப்பதை நான் ஏற்று கொண்டேன். இன்று எங்கள் மாத வருமானமும் கூடி, 10,00,000 ரூபாய் மதிப்பிற்கு இடமும் எங்கள் பெயரில் இருக்கிறது. மேலும் நாங்கள் நடத்தும் கடையின் இடம் வழக்கில் உள்ளது. 90 வருடங்கள் நாங்கள் அந்த கடையை நடத்தி கொள்ள கோர்ட்டில் அனுமதி கிடைத்துவிட்டது. மேலும் அந்த கடையின் இடமும் சொந்தமாக பட்டா வழங்க கோரி கேஸ் நடக்கிறது. அதுவும் அன்னையின் அருளால் வெற்றி பெற வேண்டும். அன்னை அதை



வெற்றி பெற செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நான் ஜீவனுள்ள மலர்கள் புத்தகத்தை மையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அன்னையே என் வீட்டிற்குள் வருவதை போன்ற ஆனந்தத்தை நான் அப்பொழுது உணர்ந்தேன். என் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்விலும் நான் அன்னையை உணர்கிறேன். சில நாட்கள் நான் தூக்கம் வராமல் அவதிப்பட்டேன். அப்பொழுது திடீரென்று மனதை ஒருநிலைப்படுத்தும் செடி (Concentration) மையத்தில் சேவை புரியும் ஒருவர் மூலமாக நான் கேட்காமலே எனக்கு கிடைத்தது. இதெல்லாம் அன்னையின் அற்புதங்களே. பாண்டிச்சேரிக்கு உங்கள் இடத்திற்கு வந்து தரிசனம் செய்ய வேண்டும் என்று ஆவலாக உள்ளது. உங்கள் அனுமதி கிடைத்தால் சந்தோஷம்.

-- அன்னையின் பக்தை R. சுபாஷினி ராமசுப்பு, திண்டுக்கல்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பிறருக்கு நாம் வலி கொடுப்பது தெரியாது. அது ஆனந்தமாகவுமிருக்கும். வலி வரும்பொழுது தெரியும். மனம் மாறினால் நாம் கொடுப்பதும், பெறுவதும் ஆனந்தம் எனத் தெரியும்.

***வலி ஆனந்தமாக மாறும் நேரம் மனிதன் பிரம்மமாகும் நேரம்.***

('*அன்னையின் தரிசனம்*' என்ற நூலிலிருந்து)

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

அன்னையைத் தெய்வமாக ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு-வரும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பல இருக்கின்றன. அவற்றைக் கவனமாகக் கடைப்பிடிக்கின்றவர்-களுடைய வாழ்க்கை, தெய்வ மணம் நிறைந்து மகிழ்ச்சிகரமாகவும், சுபிட்சமாகவும் அமைவதைக் கண்கூடாகக் காணலாம்.

இந்தக் கட்டுரையில் அன்னையின் அன்பர்கள் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பற்றிச் சற்று விளக்கமாகவும், விரிவாகவும் எழுத நினைக்கின்றேன். அன்னையை வழிபட விரும்பும் ஏராளமான 'அமுதசுரபி' வாசகர்கள், 'அன்னையை எவ்வாறு வணங்க வேண்டும்? அன்னையை வழிபடுவதற்கு ஏதேனும் விதிமுறைகள் இருக்கின்றனவா?' என்று கேட்டு எனக்கு அடிக்கடி எழுதுகின்றார்கள். அவ்வாறு கேட்டு எழுதுபவர்களுக்கு நான் விளக்கமாகப் பதில் எழுதுகின்றேன்.

இதற்குமுன், 'அன்னையை வழிபடுவது எப்படி?' என்ற தலைப்பிலேயே 'அமுதசுரபி'யில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கின்றது. ஆனாலும் எனக்குக் கடிதம் எழுதும் ஒவ்வொரு வாசகரும், 'அன்னையை வணங்குவதற்கான வழி முறைகளைத் தெரிவிக்க வேண்டும்' என்று கேட்கின்றார்கள்.

அன்னையை வணங்கும் வழிகளை இரண்டு வகைகளில் எழுதலாம். அவற்றின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எழுதுவது ஒரு வகை; விரிவாக எழுதுவது இன்னொரு வகை. இதுவரை நான் அன்பர்களுக்கு இவை பற்றி விவரமாக எழுதி இருந்தாலும்,



அவர்கள் இவை பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு விரித்துரைக்கத் தவறிவிட்டேன் என்பதை அவர்களிடமிருந்து விளக்கம் கேட்டு வரும் கடிதங்களின் வாயிலாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. அந்த வகையில் என்னுடைய விளக்கங்கள் அன்னையின் அணுக்கத்தைத் தொட்டுக் காட்டாமல் தொலைவில் நின்று சுட்டிக்காட்டும் அளவில் பொதுவாக அமைந்துவிட்டன என்றே தோன்றுகிறது. அக்குறையைப் போக்குகின்ற நோக்கில் இந்தக் கட்டுரை அமைகின்றது. அதை இவ்வாறு அமைப்பதற்கு வேறொரு காரணமும் இருக்கின்றது.

உதாரணமாக, ஓர் அன்பருக்கு, ''வீட்டையும், சுற்றுப்-புறத்தையும் சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம். இது உங்களுடைய பிரச்சனை தீர்வதற்கு வழி செய்யும்'' என்று நான் எழுதி இருந்தேன். நான்கு வாரங்களுக்குப் பிறகு அந்த அன்பர், "நீங்கள் கூறியபடி நான் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறேன். ஆனால் பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடாக இல்லை'' என்று குறைப்பட்டு எனக்கு எழுதியிருந்தார்.

அவருடைய பிரச்சனை தீராமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. 'வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதென்றால் என்ன?' என்பதைப் புரிந்து கொள்ளாமலே ஏதோ ஒன்றைச் செய்துவிட்டு, வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டதாக நினைத்துவிட்டார் அவர். அதனால்தான் அவருடைய பிரச்சனை அப்படியே தீராமல் இருந்துவிட்டது.

பெரும்பாலும் நம்மைச் சுற்றியுள்ள குறைகள் நம் கண்ணில் படுவதில்லை. அப்படியே நாம் அக்குறைகளைத் தெரிந்துகொள்ள விரும்பினாலும், ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் நம் கண்ணில் படுவதில்லை. கண்ணில் பட்டதைப் பார்த்துவிட்டுக் குறைகள் அனைத்தையும் பார்த்துவிட்டதாக நினைத்துக் கொள்கின்றோம். பார்த்ததற்கும், பார்க்கப்பட வேண்டியதற்கும் நடுவே ஒரு பெரிய இடைவெளியே இருக்கின்றது. இந்த உண்மையைப் புரியவைக்க

முன்வருகின்றது இந்தக் கட்டுரை.

**1. நம்பிக்கை, பக்தி, தெய்வச் சிந்தனை**

அன்பர்களுக்குத் தேவையானவை மூன்று. அவை: (1) நம்பிக்கை, (2) பக்தி, (3) இடையறாத தெய்வச் சிந்தனை. 'நாம் வேண்டும் என்று கேட்டதைத் தவறாமல் கொடுக்கும் ஆற்றலுடையது அன்னையின் அருள்' என உறுதியாக நம்புவது நம்பிக்கை. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அன்னையை மனத்தால் பணிந்து செய்வது பக்தி. மனத்தை எப்பொழுதும் அன்னையிடம் பதித்து வைத்திருப்பது இடையறாத தெய்வச் சிந்தனை.

இந்த மூன்றும் செயல்படும் விதத்தை இங்கே பார்க்கலாம். செயல்கள் நிறைந்தது நம் வாழ்க்கை. செயல்கள் இரு வகைப்படும். ஒன்று, முடிவு செய்த ஒன்றை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்கள்; இரண்டு, நடைமுறையில் இயல்பாகச் செயல்படும் செயல்கள். உதாரணமாக, 'பெண்ணுக்குத் திருமணம் செய்ய வேண்டும்' என்று நிச்சயித்து, அதைச் செயல் வடிவில் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்கள் முதல் வகையைச் சேர்ந்தவை. இதுவன்றி, அன்றாட வாழ்க்கையில் உண்பது, உறங்குவது, எழுதுவது, பேசுவது, நடப்பது, உட்காருவது, குளிப்பது, விளையாடுவது போன்ற பல செயல்களிலும் நாம் ஈடுபடுகின்றோம். இவை இரண்டாவது வகையைச் சேர்ந்தவையாகும். நம்பிக்கையும், பக்தியும் முதல் வகையைச் சேர்ந்த செயல்களில் வெளிப்பட வேண்டும். இடையறாத தெய்வச் சிந்தனை இரண்டாவது வகையான செயல்களில் கலந்து நிற்க வேண்டும்.

'நம்பிக்கையும், பக்தியும் முதல் வகையைச் சேர்ந்த செயல்களில் வெளிப்பட வேண்டும்' எனக் குறிப்பிட்டேன். அதனை



விளங்கிக்கொள்வோம். திருமணம் செய்விப்பதையே முதல் வகையைச் சேர்ந்த செயல்களுக்கு ஓர் உதாரணமாகக் கொண்டு பார்க்கலாம். அந்தச் செயலுக்குப் பல கட்டங்கள் இருக்கின்றன. 'பெண்ணுக்குத் திருமணம் செய்ய வேண்டும்' என முடிவெடுப்பது முதலாவது கட்டமாகும். இதைத் தொடர்ந்து பல கட்டங்கள் உள்ளன. பெண்ணிடத்தும், குடும்பத்தினர், உறவினர், நெருங்கிய நண்பர்கள் ஆகியோரிடத்தும் அதை வெளிப்படுத்துதல்; தக்கவர்களை அணுகி வரன்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தல்; 'தேடிய வரன்களில் பொருத்தமாக அமையக்கூடிய வாய்ப்பை அதிகமாகப் பெற்றிருக்கும் வரன் யார்?' என்று ஆய்ந்து, ஒரு முடிவுக்கு வருதல்; எடுத்த முடிவின்படி விரும்பிய வரனை அணுகி எல்லா விவரங்களையும் கேட்டறிந்து மாப்பிள்ளை வீட்டாரின் ஒப்புதலைப் பெறுதல்; இந்த ஒப்புதலை நான்கு பேர் முன்னிலையில் நிச்சயப்படுத்துதல்; பின்னர், நிச்சயித்தபடி திருமணத்தை முடிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தல்; குறிக்கப்பட்ட தேதியில் திருமணத்தை நடத்தி முடித்தல்; என்ற பல கட்டங்களில் திருமணம் நிறைவேறுகின்றது.

'திருமணம் செய்ய வேண்டும்' என முடிவெடுக்கும்போது, 'இந்தத் திருமணம் எவ்விதத் தடையுமின்றி இனிதே முடிய வேண்டும்' என்று அன்னையிடம் பிரார்த்தனை செய்து, 'இந்தக் கோரிக்கையை அன்னை ஏற்றுக் கொண்டு, அதனை நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்' என்ற உறுதிப்பாட்டை அடைவது நம்பிக்கையாகும். இந்த உறுதிப்பாட்டைக் குலைக்கும் விதத்தில் அவ்வப்போது சந்தேகங்கள் எழும். அந்தச் சந்தேகங்களுக்கு இடம் கொடாமல், 'அவை ஏன் ஏற்பட்டன?' என்பதற்கான காரணங்களை அறிந்து, அவற்றை அறவே நீக்கிவிட வேண்டும். அவற்றை ஒவ்வொரு தடவையும் நெஞ்சை விட்டு நீக்கும்போது, அந்த உறுதிப்பாடு மேலும் மேலும் வளர்ந்து நம்பிக்கையை முழுமையாக்கிவிடுகின்றது.

முதல் கட்டத்தைத் தொடர்ந்து பல கட்டங்கள் வருகின்றன என்பதைப் பார்த்தோம். ஒவ்வொரு கட்டத்தையும் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் அன்னையின் திருவருளைத் துணையாகக் கொண்டு செயல்படுவது பக்தியாகும். ‘பஜ்’ என்ற சொல்லிலிருந்து வந்தது ‘பக்தி’. ‘பஜ்’ என்பது ‘பணிதல்’ எனப் பொருள்படும். ஆகவே ‘பக்தி’ எனப்படுவது ‘பணிந்து செயல்படுதல்’ என்பதைக் குறிக்கும். அன்னையைப் பணிந்து செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் பக்தியை வளர்க்கும் செயல்களாகும்.

ஒவ்வொரு கட்டத்திலும் தடைகளோ அல்லது சிக்கல்களோ ஏற்படலாம். ஏதாவது ஒரு கட்டத்தில் திருவருளின் துணையை நாடாமல் நாம் செயல்பட்டிருப்பதே அவை ஏற்படுவதற்குக் காரணமாகும். இந்தக் காரணத்தை உணர்ந்தவுடன், ‘நான் செய்தது தவறு’ என்று மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால், நடுவில் வந்த சிக்கலோ அல்லது இடையூறோ விலகிப்போகும். அப்படிச் செய்யத் தவறிவிட்டால், மேற்கூறிய சிக்கல்களினால் மனம் குழம்பி, சந்தேகம் எழுந்து, நம்பிக்கை உறுதி இழந்து அழிந்துபோகும் நிலை ஏற்படும். அதற்கு மாறாக, மேற்கூறிய முறைப்படி சிக்கல்களை விலக்கிக் கொண்டால், சந்தேகமும் எழாது; நம்பிக்கையும் தொடர்ந்து உறுதிப்பட்டுவிடும். பக்தியினால் நம்பிக்கை மேன்மேலும் வலுவடைந்து, முழுமையாகிவிடுகின்றது. ஆகவே, நம்பிக்கையும், பக்தியும் ஒன்றுக்கொன்று இணை பிரியாதவை என்பதை நாம் உணர வேண்டும். நம்பிக்கை பூரணமாக உறுதிப்பட்ட பிறகு, திருமணம் எல்லாக் கட்டங்களையும் சுலபமாகக் கடந்து, சிறப்பாக முடிந்துவிடுவதை அனுபவவாயிலாக அறியலாம்.

செயல்களை இரண்டு வகைகளாகப் பிரித்து, ‘முதல் வகையைச் சேர்ந்த செயல்களில் எவ்வாறு நம்பிக்கையும், பக்தியும் வெளிப்பட வேண்டும்?’ என்பதை ‘திருமணம்’ என்னும் உதாரணத்தால் விளக்கினேன். இரண்டாவது வகையைச் சேர்ந்த



செயல்களுக்கு உதாரணம் தேவை இல்லை. ‘அன்றாட வாழ்க்கையில் இயல்பாக நிகழ்கின்ற செயல்கள் அனைத்தும் இந்த வகையில் அடங்கும்’ என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். அவற்றில் சிலவற்றை முக்கியமாகக் கொள்ளலாம்.

உண்ணல், உறங்கல், உறங்கி விழித்தல், வீட்டை விட்டு வெளியேறிச் செல்லல், திரும்ப வீட்டுக்கு வருதல், குழந்தை, மனைவி, தாய், தந்தை, சகோதர-சகோதரியர், உறவினர், நண்பர் போன்றோரிடம் ஏதேனும் உதவியைப் பெறுதல் அல்லது உதவி செய்தல், நண்பர்களையோ அல்லது உறவினர்களையோ வரவேற்று உபசரித்தல், அல்லது வழி அனுப்பி வைத்தல் போன்றவை மிகவும் முக்கியமானவை. அச்செயல்களை எல்லாம் செய்யும் பொழுது மனம் அன்னையிடம் பதிந்தவண்ணம் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அதன் காரணமாக இடையறாத தெய்வச் சிந்தனையானது நம்மிடம் நிலைபெற்றுவிடும்.

நம்பிக்கை, பக்தி, இடையறாத தெய்வச் சிந்தனை ஆகிய மூன்றையும் பெற்றவர், ‘அன்னையின் அன்பர்’ என்ற தகுதியைப் பெற்றவராகிறார். இந்த மூன்றையும் அடைந்தவர்களுக்கு எந்த நாளும் இன்பமேயன்றித் துன்பமே இல்லை.

## 2. பொருட்செல்வம்

பொருட்செல்வம் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேறுவது கடினம். பொருள் இல்லாத வீடும், நாடும் சிறக்க முடியாது. ‘பொருட்செல்வம்’ என்பது பொருளுக்கு அடிமைப்பட்டுச் சேமிக்கும் செல்வமன்று. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவைப்படுவதுதான் பொருட்செல்வம். அன்னையிடம் நம்பிக்கையும், பக்தியும் கொண்டு, அவரை இடையறாது சிந்தித்தும், வந்தித்தும் வாழ்க்கையை நடத்துகின்ற அன்பருக்கு உணவு, உடை, வீடு, ஆரோக்கியம், கல்வி ஆகியவை எந்த வகையாலும் தடைப்படாது கிடைத்தல் வேண்டும். ‘அதற்குத் தேவையான

பொருட்செல்வத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?' என்பதை இங்கே காண்போம்.

வேறொரு கட்டுரையில், 'பூக்கள் எவ்வாறு இன்றியமையாத துணையாக மனிதருக்கு அமைந்துள்ளன?' என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதில், நாகலிங்கப் பூ பொருட்செல்வத்தை பெருக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றது என்று கூறியிருந்தேன். நாகலிங்கப் பூ கிடைக்கின்ற பகுதிகளில் வசிப்பவர்கள், அதனைத் தினமும் கொண்டுவந்து அன்னையின் திருவுருவப் படத்துக்குச் சார்த்தி வழிபடுவது அவசியமாகும். அந்தப் பூ கிடைப்பதற்கு வழி இல்லை என்றால், அதற்காக வருந்தத் தேவையில்லை. ஏனெனில் அப்பூவை அன்னையின் படத்துக்குச் சார்த்துவதால் மட்டுமே பலன் ஏற்படுவதில்லை. பொருட்செல்வத்தைப் பெற நாம் செய்யும் உண்மையான முயற்சியினால் ஏற்படும் பலனை விரைவுபடுத்தி, அதனைக் கூட்டிவைக்க மட்டுமே உதவி செய்கின்றது அந்தப் பூ. உழைப்பு இல்லாமல் செல்வத்தைப் பெறுவது கடினம். அப்படி உழைத்துப் பெறும் பலனைச் சிதறிவிடாமல் கூட்டிவைப்பதுதான் அந்தப் பூவின் சிறப்பான இயல்பு. ஆகவே அந்தப் பூ கிடைக்காவிட்டாலும் பொருளைப் பெறுவதற்குச் செய்த முயற்சி, உழைத்த உழைப்பு வீண் போகா. இருப்பினும் அந்தப் பூ கிடைக்க வாய்ப்பு இருந்தால், அதை உபயோகிக்க முயல வேண்டும்.

'பொருட்செல்வம் கிடைக்க முயற்சி தேவை' என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன். முயற்சி என்பது இரண்டு வகைகளாகப் பொருள்படும். ஒன்று, பொருளை ஈட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் தொழில்; இரண்டு, பொருள் சேர்வதற்குச் சரியான சூழ்நிலையை உருவாக்குகின்ற உழைப்பு. அநேகமாக ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்துதான் பொருளைச் சம்பாதிக்கின்றார்கள். ஆனால், தொழில் மட்டுமே போதிய அளவு செல்வத்தைக் கொடுப்பதில்லை. தொழில் செய்கின்ற பலர் போதிய பொருள்



இல்லாமல் துன்புறுவதை நாம் பார்க்கின்றோம். அதற்குக் காரணம், மேற்கூறிய உழைப்பு இல்லாததுதான். இந்த உழைப்பு மிகுந்து உள்ளவர்களிடம் தொழில் லாபகரமாக அமைந்து, போதிய செல்வத்தைக் கொடுக்கின்றது. எந்தத் தொழிலாக இருந்தாலும், அது போதிய அளவு செல்வத்தைக் கொடுக்க வேண்டுமானால், அதற்கு வேண்டிய சரியான உழைப்பை அது பின்னணியாகக் கொண்டிருக்க வேண்டும். இதிலிருந்து, 'தொழிலைவிட, அதற்குப் பின்னணியாக இருக்க வேண்டிய உழைப்பு மிகவும் முக்கியமானது' என்பது நமக்குப் புரிகின்றது.

இந்தக் கருத்தை ஓர் உதாரணத்தால் விளக்கலாம். நல்ல விதையாக இருந்தாலும், அது விதைக்கப்பட்ட மண்ணுக்கு ஏற்பத்தான் பலனைக் கொடுக்கின்றது. சத்தான மண்ணில் விதைக்கப்பட்ட விதை அபரிமிதமான பலனைக் கொடுக்கின்றது. வளம் இல்லாத மண்ணில் விதைத்த விதை மிகச்சொற்ப அளவில் பலனைக் கொடுக்கின்றது. இங்கே தொழில் விதை போன்றது. தொழிலுக்குத் தேவையான உழைப்பு, வளம் பொருந்திய மண்ணைப் போன்றது.

'பொருட்செல்வத்தைப் பெறுவதற்கான தக்க சூழ்நிலையை உருவாக்கும் உழைப்பு என்பது என்ன?' என்று சொல்கின்றேன். பொருட்செல்வம் நம்மை விரும்பி வரவேண்டுமானால், விரும்பத்தகாத வகையில் நாம் எந்தப் பொருளையும் உபயோகிக்கக்கூடாது; எவர் ஒருவரையும் விரும்பத்தகாத வகையில் நடத்தக்கூடாது; எந்த ஒரு செயலையும் விரும்பத்தகாத வழியில் செய்யக்கூடாது. அன்னையையே இடையறாது சிந்திக்கும் அன்பர்கள், விரும்பத் தகுந்தவற்றையே செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். இத்தகைய அன்பர்களிடம் பொருட்செல்வம் தானாகவே விரும்பி வருவதைக் கண்கூடாகக் காணலாம்.

தொடரும்....

# பகுதியான ஒரு அத்தியாயத்தை முழுமையான நூலாக எழுதிய பாணி

- சாவித்திரி 1900 அளவில் 14 வரி செய்யுள் (sonnet) வடிவில் எழுதப்பட்டது.

  1950இல் 12 புத்தகங்களான 24,000 வரியுள்ள இதிகாசமாக முடிந்தது.

  நிறைவின் முழுமையை மூலத்தில் அறிந்த கவி நீட்டலாம், சுருக்கலாம்.

  **எதை அறிந்தால் அனைத்தையும் அறிய முடியுமோ அதற்கு பிரம்மம் எனப் பெயர்.**

  மூலம் தெரிந்தால் முழுமை பிடிபடும்.

  திருமணத்தின் கரு ஆணல்ல, பெண். பெண்ணின் பெருமை முழுமையான மூலம்.

  பெண்ணின் பெருமையின் பூரணத்தை அறிந்தவனுக்கு திருமணம் சொர்க்கம்.

  கல்வியைப் பற்றிக் கூறும்பொழுது *'இளமையிற் கல்'* என்றார்கள்.

  காதல் இளமையின் அனுபவமற்ற அறியாமை இல்லாததால் மகிழ்வது என உலகம் முழுவதும் நம்புகிறது. வெறும் உடலான மனிதனுக்கும், உணர்வில் உலகை இழப்பவனுக்கும் அது உண்மை.

  காதல் தெய்வீகமானது, ஆத்மாவை அறியாதவனுக்குக் காதல் விலக்கு.

  ஆத்மா தன்னை அறிவது ஜீவன் முக்தி.



ஆத்மா இறைவனையறிவது ஜீவன் பரமாத்மாவில் கரைந்து பெறும் மோட்சம்.

ஆத்மா மனத்துள்ளிருந்து வெளிப்பட்டு மனம் பெறும் ஆன்மீக மெருகு சைத்திய புருஷன்.

உணர்வின் ஆத்மா பரிணாமத்தால் வெளிப்படுவது சைத்திய புருஷன் (உயிருக்குரியது).

அதுவே இராதையின் காதல் எழுந்த உற்பத்தி ஸ்தானம்.

*"அனைவரும் கண்ணனை நாடிப் போகின்றனர். கண்ணன் என்னை நாடி வருகிறான்"* என்றாள் ராதை.

*"கண்ணனவன் என்னகத்தில் காலை வைத்த நாள் முதலாய் எண்ணமெல்லாம் அன்னவன் மீது ஏகியபின் மீளவில்லை"* என்றார் புலவர்.

*"கண்டதுண்டோ கண்ணன் போல்"* என்பது கோபிகை.

*''கண்ணா என்று நான் கதறியபொழுது பண்ணிசைத்தே வருவான்"* என்பது பெண் மனம்.

*''தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெலாம் ஒருருவாய் சமைத்தாய் உள்ளமுதே கண்ணம்மா''* என்பது கண்ணன் காதலின் குரல்.

*"அவள் தாளதனைக் கைக்கொண்டு மகிழ்ந்திருப்பான்"* என்பது கண்ணனின் ஈடுபாடு.

காதல் அழியாதது, அழிவையறியாதது. கடவுளை மனிதனில் அறிவது காதல்.

ஆசையும், மோகமும் உடலுக்குரியன, உள்ளத்தைக் கிளர்வன, உயிரில் எழுவனவல்ல.

மூலத்தையும், முழுமையையும் மனிதனில் அறிபவன் காதலை அறிவான்.

மூலத்தை முழுமையாக அறிபவராலேயே கண்டத்தில்

அகண்டத்தை வெளிப்படுத்த முடியும்.

பெரும்பாலும் எல்லா அத்தியாயங்களிலும் பகவான் அதை சிறப்பாகவும், உயர்வாகவும் செய்திருக்கிறார். **அதை அறிவது பகவான் எழுத்தின் ஜீவனைப் பெறுவது**.

முதல் அத்தியாயம் முடிவில் கூறுவது: எதையும் இடையில் கைவிடக்கூடாது.

கடைசி அத்தியாயம் முதலில் கூறுவது: மனிதன் தன் முழுமையை அறிய வேண்டும்.

கடைசி அத்தியாயத்தின் தத்துவக் கரு முதல் அத்தியாயத்தில் உபாயமாகக் கூறப்படுகிறது.

7ஆம் அத்தியாயம் அகந்தையைப் பற்றியது. எப்படி அகந்தையைக் கடந்து ஆண்டவனை அடைவது எனக் கூறுகிறது. இது வேதாந்தம். முதல் அத்தியாயத்தில் வேதாந்தம் கூறும்,

பரிணாமம் - வாழ்வு உடலில் எழுகிறது. மனம் வாழ்வில் எழுகிறது - அடுத்த கட்டத்தில் ஆன்மா மனத்திலெழுகிறது என்று பொருள்படுகிறது என்கிறார். இரண்டும் ஒரே வேதாந்தக் கருத்தை இரு அத்தியாயங்களில் இடத்திற்கேற்ப கூறுகின்றன.

*பிரம்மம் புருஷா ஈஸ்வரா* - (Book II - Chapter II) என்ற அத்தியாயம் முழுவதும் முழுமையைக் கூறுவது.

முதல் அத்தியாயம் உடலும், உயிரும், மனமும், ஆத்மாவும் பிரிந்துள்ளதை இணைத்த பரிணாமத்தையும், இனிவரும் பரிணாமத்தையும் எடுத்துக் கூறி அற்புதத்தில் முடிக்கிறது.

❋❋❋

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## முரண்பாடு - உடன்பாடு

- வாழ்க்கை பரிசு தர தண்டனை மூலம் கொடுப்பது ஒரு முரண்பாடு.
- பல் வலியால் வீங்கிய கன்னத்தில் அறைந்து அன்னை அவ்வலியைப் போக்கிய நிகழ்ச்சி ஒன்று மட்டுமே இதுபோல் நான் கேள்விப்பட்டது.
- காது மந்தமானவர்க்கு உரத்த குரலில் பேசினால்தான் கேட்கும் என்பது விளக்கம்.

  உடலில் வேதனை ஆழத்திலிருந்தால், அருள் அவ்வாழத்தைத் தொட முரட்டுத்தனமாகச் செயல்படுகிறது என்பது விளக்கம்.
- விளக்கம் அறிவுக்கு ஏற்கக்கூடியதானாலும், செயல் அதிர்ச்சி தருகிறது.
- காலில் வலி 1 வருஷமாக இருக்கிறது, போகவில்லை, குறையவில்லை.
- அவ்வலியுடன் அன்பர் தியான மையம் வந்தார்.
- வீட்டிற்குப் போகும் வழியில் ஒரு கடையில் நின்றார்.
- அவரை அணுகி ஒரு மாருதி கார் வருவதை அவர் காணவில்லை.
- வலியுள்ள கால் மீது சக்கரம் ஏறியது.

  *வலி மறைந்தது.*
- அன்பர் ஜீவனுள்ள மலர் மூலம் அருள் பெற்றதை அறிந்தார்.

  *எப்படி இது நடக்கிறது என அவருக்குப் புரிந்ததா எனத் தெரியவில்லை.*

  ***அனைவருக்கும் அனைத்தும் கிடைத்தபின் எனக்கு.***

❁❁❁

## நடைமுறை

கார் ஓட பெட்ரோல் வேண்டும், பெட்ரோல் போடாமல் காரை ஓட்ட எவரும் முயல்வதில்லை. இங்க் போடாமல் பேனா எழுதுமா? உலகம் அதன் நடைமுறைகளை அறியும். அதைப் பின்பற்றும். வேறு நடைமுறையை எதிர்பார்க்காது. ஏனெனில் அது நடைமுறைக்கு ஒத்து வாராது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் 23 நாள் உபவாசமிருந்தார். உபவாசமிருந்தால் உடலில் தெம்பிருக்காது. படுத்துவிட வேண்டும். அவர் தன் வழக்கமான வேலைகளை நிறுத்தவில்லை. தினசரி நடப்பதையும் நிறுத்தவில்லை. உபவாசம் முடிந்த பின் பழரசம் சாப்பிடுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக சாப்பாட்டை அதிகரிப்பார்கள்.

***இவை நடைமுறை.***<br>
***பகவான் உபவாசம் முடிந்தபின் வழக்கம்போல் சாப்பிட்டார்.***<br>
***அன்னை ஜீவியம் நடைமுறைக்கு மாறுபட்டும் இருக்கும், அதனால் முடியும்.***

கம்ப்யூட்டரில் உள்ள modem வேலை செய்யவில்லை. அதற்குரிய adapterஉடன் கடைக்கு அன்பர் போனார். “இந்த adapter இந்த modemமுக்கு வேலை செய்யாது” என்றனர்.

அன்பர் இத்தனை நாள் அது எப்படி வேலை செய்தது என சிந்தித்தார். மீண்டும் அதையே பயன்படுத்தினார். Modem அதே adapterஉடன் வேலை செய்தது.

**இது நடைமுறைக்கு ஒவ்வாது.**<br>
**அன்பருக்கு நடைமுறை ஒவ்வாது.**

***என் கடன் பிறர் பேரதிர்ஷ்டம் பெற விழைவது.***

❁❁❁

Vol. I Issue 6 September 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


## புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆ : (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆ : (044)-24347191


Vol. I Issue 6 September 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## செப்டம்பர் 2011